வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P. 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram money transfer – மணிகிராம் பணப்பரிமாற்றும்
Ria MONEY TRANSFER – றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER – வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

Email : eelanaduweekly@gmail.com மலர் : 05 28.02.2024 புதன்கிழமை இதழ் : 59 பக்கங்கள் : 12

# செப். 18 - ஒக். 18 இடையில் ஜனாதிபதி தேர்தல் நடக்கும்!

## தேர்தல்கள் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, பெப்ரவரி 28

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 18ஆம் திகதி மற்றும் ஒக்ரோபர் மாதம் 18ஆம் திகதிக்கு இடைப்பட்ட திகதியில் நடைபெறும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேர்தல் செலவுகளை ஒழுங்குபடுத்தும் சட்டம் தொடர்பில் அரசியல் கட்சிகளுக்கு தெளிவு படுத்தும் கூட்டம் நேற்று தேர்தல்கள் திணைக்கள பணிமனையில் நடந்தது.

இதன் பின்னர், ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அதன் தலைவர் சமன் சிறி ரத்நாயக்க மேற்கண்ட விடயத்தைத் தெரிவித்தார்.

தேர்தல்களை நடத்துவதற்கு நிதி சம்பந்தமாக காணப்பட்ட பிரச்னை தற்போது இல்லாமல் போயுள்ளது. மற்றொரு தெளிவுபடுத்தல் கூட்டம் எதிர்வரும் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது என்றும் அவர்

11

# சிறிய, நடுத்தர முயற்சிக்கு தனியான கடன் திட்டம்!

### நீதி அமைச்சர் விஜயதாஸ

கொழும்பு, பெப். 28

சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளுக்கு தனியான கடன் திட்டத்தையும் அறிமுகப்படுத்தவுள்ளதாக நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அத்துடன், அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம், தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள 'பரேட்டா' சட்டம் தொடர்பான திருத்தத்தை எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாகவும்

11

# எம்.பி. பதவியை இராஜினாமா செய்தார் உத்திக பிரேமரத்ன!



கொழும்பு, பெப். 28

பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் உத்திக பிரேமரத்ன தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இது தொடர்பான பதவி விலகல் கடிதத்தை சபாநாய கருக்கும், பாராளுமன்ற செயலாளருக்கும் அவர் அனுப்பி வைத்துள்ளார்.

உத்திக பிரேமரத்ன 2020 பொதுத் தேர்தலில் அநு ராதபுரம் மாவட்டத்தில் போட்டியிட்டு வெற்றிபெற்றார்.

11

# யாழ். இந்திய துணைத்தூதராக சாய் முரளி பொறுப்பை ஏற்றார்!



யாழ்ப்பாணம், பெப். 28

யாழ்ப்பாணத்துக்கான புதிய இந்திய துணைத் தூது வராக செவிதி சாய் முரளி கடமைகளை பொறுப்பேற் றார் என்று யாழ். இந்திய துணைத் தூதரகம் அறிவித்துள்ளது.

2021ஆம் ஆண்டு முதல் யாழ்ப்பாணத்துக்கான இந் திய துணைத் துதராக செயல்பட்ட ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரன் டில்லிக்கு அழைக்கப்பட்டார். நேற்று

11

# மத்திய வங்கியின் அதிகாரிகள் விசாரணைக்கு அழைக்கப்பட்டனர்!

கொழும்பு, பெப். 28

மத்திய வங்கியின் நிர்வாக சபையை அரச நிதி பற்றிய குழு (கோப்) முன்பாக அடுத்த வாரம் விசாரணைக்கு முன்னிலையாகுமாறு அதன் தலைவர் கலாநிதி ஹர்ஷ டி சில்வா அழைத்துள்ளார்.

அண்மையில், மத்திய வங்கி ஊழியர்களின் மாதாந்த ஊதியம் 70 வீதத்தால் அதிகரிக்கப்பட்டது. இது பலரின் விமர்சனத்துக்கு ஆளானது. அத்துடன், இது தொடர்பில் மத்திய வங்கி ஊழியர்களிடம் விசாரணை நடத்துமாறும் கோரிக்கைகள் விடுக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# யாழ். பல்கலையிலும் இன்றும் நாளையும் பணிப்புறக்கணிப்பு

### ஊழியர் சங்கம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 28

யாழ்ப்பாணம், கொழும்பு உள்ளிட்ட நாட்டின் அரச பல்கலைக்கழகங்களில் இன்றும் நாளையும் பணிப்புறக் கணிப்பும் கவனவீர்ப்பு போராட்டமும் முன்னெடுக்கப் படவுள்ளன. அனைத்துப் பல்கலைக்கழக தொழிற்சங்க கூட்டமைப்பின் அழைப்பின் பேரில் இந்தப் போராட்டங்கள் நடைபெறவுள்ளன.

அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் பல்கலைக் கழக கல்விசாரா பணியாளர்களின் சம்பள முரண் பாடு, சம்பள அதிகரிப்பு மற்றும் அவர்களைப் பாதிக்கும் பிரச்னைகளுக்கு உரிய கால

11

# உட்கட்சி முரண்பாடுகளால் தமிழ் மக்கள் ஏமாற்றத்தில்!

### மன்னார் ஆயர் கவலை

மன்னார், பெப். 28

தமிழர் தாயகத்தில் ஏற்பட்டுள்ள பெரும் உட்கட்சி முரண்பாடுகள் தமிழ் மக்களை ஏமாற்றமடைய செய்துள்ளன. எதிர்பார்க்கப்பட்ட பல்வேறு தேர்தல்கள் பின்தள்ளப்பட்டு வருகின்றன. இது மக்களுக்கு ஏமாற்றத்தையும் கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது - என்று மன்னார் மறைமாவட்ட ஆயர் இமானுவல் பெர்னாண்டோ ஆண்டகை தெரிவித்துள்ளார்.

அத்துடன், மன்னார் தீவில் முன்னெடுக்கப்படும் காற்றாலை திட்டத்தால் ஏற்படும் ஆபத்துகள் குறித்து நாம் அரசாங்கத்துக்கு தெரிவித்துள்ளோம். ஆயினும் அரசாங்கம் இத்திட்டத்தை

11

# தென்னக்கோன் மீதான வழக்குகள் ஒத்திவைப்பு

கொழும்பு, பெப். 28

பொலிஸ் மா அதிபர் தென்னக்கோனுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தொடர்பான விசாரணை ஏப்ரல் 2ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தேசபந்து தென்னக்கோன் பதில் பொலிஸ் மா அதிபர் - பொலிஸ் மா அதிபராக நியமித்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து 7 மனுக்கள் உயர்நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டன. இந்த வழக்குகள் நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோதே ஏப்ரல் 2ஆம் திகதிக்கு வழக்குகள் ஒத்திவைக்கப்பட்டன.

புதிய பொலிஸ் மா அதிபராக தேசபந்து தென்னக்கோனை நியமிப்பது தொடர்பில் அரசமைப்பு பேரவைக்கு இன்னும் அறிக்கைகள்

11

# அமைச்சுப் பதவியை துறந்து கடலில் போராட நான் தயார்!

### அமைச்சர் டக்ளஸ் அதிரடி அறிவிப்பு

யாழ்ப்பாணம், பெப். 28

இந்திய தரப்பிலிருந்து இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தங்கள் ஏற்படுத்தப் படுமாக இருந்தால் நான் அமைச்சரவையில் இருந்து இராஜினாமா செய்து விட்டு, எமது கடற்றொழிலாளர்களுடன் இணைந்து கடலில் எதிர்ப்புப் போராட்டம் நடத்துவதற்கு தயாராக உள்ளேன் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அதிரடி அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

இந்திய கடல் தொழிலாளர்களின் அத்துமீறிய சட்டவிரோத தொழிலால் வளங்கள் சுரண்டப் படுகின்றன எனவும், இலங்கை கடற்தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது எனவும் அவர் கூறினார்.

ஆகவே ஒரு வினாடி கூட தடை செய்யப்பட்ட சட்டவிரோத தொழிலுக்கு இடம் கொடுக்க முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

நேற்று யாழ். மாவட்ட

11

### பேருந்து தரிப்பிடம் இல்லை:

# இன்று முதல் தனியார் பேருந்து சேவைகள் நடைபெறமாட்டா!

### தனியார் பேருந்து சங்கங்கள் அறிவிப்பு

யாழ்ப்பாணம்,பெப். 29

யாழ்ப்பாணத்தில் முறையான பேருந்து தரிப்பிடம் இல்லாததால் இன்று புதன்கிழமை முதல் தனியார் போக்குவரத்து சேவைகள் இடம்பெறாது - வட இலங்கை தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் சி. சிவபரன், யாழ். மாவட்ட தூர இட சேவைகளுக்கான பேருந்து உரிமையாளர்களின் தலைவர் வி. சஜிந்தன் ஆகியோர் தெரிவித்தனர்.

இவர்கள் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தனர்.

மேலும், அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அழைப்பை ஏற்று யாழ்.மாவட்ட தூர சேவை சங்கத்தின் பேருந்து

11

# கைது செய்யப்படுவோருக்கு தகவல்கள் வழங்கப்படும்!

## உயர்நீதிமன்றில் பொலிஸ் மா அதிபர் உறுதி

கொழும்பு, பெப். 28

ஒருவரை கைது செய்யும் போது அவர் கைது செய்யப் பட்டமைக்கான காரணம், முறைப்பாடு செய்த நபரின் விபரங்கள், கைதானவர்க ளுக்கு வழங்கப்படும் அறிவு றுத்தல்கள் மற்றும் வழிகாட் டுதல்கள் தயாரிக்கப்பட்டு உரிய தரப்பினருக்கு வழங் கப்படும் என்று பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக் கோன் நேற்று செவ்வாய்க் கிழமை உயர் நீதிமன்றில் உறுதியளித்துள்ளார்.

பேஸ்புக் பதிவு ஒன்றுக் காக கைது செய்யப்பட்ட நப ரின் அடிப்படை உரிமை மனு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே பொலிஸ் மா அதிபர் இவ்வாறு உறுதியளித்தார்.

பொலிஸ்மா அதிபர் வரு கையையொட்டி உயர்நீதி மன்ற வளாகத்தில் பலத்த பொலிஸ் பாதுகாப்பு பலப் படுத்தப்பட்டிருந்தது. (ஐ)

# அரசாங்கத்தின் பலத்தை காட்ட நல்ல சந்தர்ப்பம்!

## அமைச்சர் பிரசன்ன

கொழும்பு, பெப். 28

சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேர ணையை தோற்கடித்து அர சாங்கத்தின் பலத்தை காட்ட இது ஒரு நல்ல சந்தர்ப்பம் என ஆளும் கட்சியின் பிரதான அமைப்பாளரும் நகர அபிவி ருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

நேற்று நடைபெற்ற களுத் துறை மாவட்ட ஒருங்கி ணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச் சர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர்,

இந்த நம்பிக்கையில்லா பிரேரணை உடனடியாக விவாதத்துக்கு உட்படுத்தப் பட வேண்டும்.

மேலும், சபாநாயகருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை விவாதத் துக்கு எடுத்து மிக விரைவில் வாக்கெடுப்புக்கு சென்றால் பாராளுமன்றத்தில் அரசாங் கம் தனது பலத்தை காட்ட முடி யும். அரசாங்கத்தின் பலத் தைக் காட்ட இது ஒரு சந் தர்ப்பம் என்றும் தெரிவித் துள்ளார்.

இதேவேளை, பேஸ்புக் ஜனாதிபதியும் வாய்ச்சவடால் ஜனாதிபதியுமே தற்போது வாக்களிப்பின்றி வெற்றி பெற்றுள்ளனர். ஆனால், தேர்தலில் வெற்றி பெற்று ரணில் ஜனாதிபதியாவார். நாட்டின் நெருக்கடியான சூழ்நிலையில் சவால்களை ஏற்றுக்கொண்ட தலைவர் யார் என்பதை இந்நாட்டு மக் கள் புரிந்துகொண்டுள்ளனர்.

வரலாறு நெடுகிலும் மக் கள் ஜனாதிபதி தேர்தலில் ஒரு முக்கிய பிரச்னையை அடிப்படையாக கொண்டு வாக்களித்துள்ளனர். போரை முடிவுக்கு கொண்டு வர மகிந் தவை கொண்டு வந்தனர். அதை அவர் செய்தார். மகிந்தவின் இரண்டாவது ஆட்சிக் காலத்தில் நாட்டை அபிவிருத்தி செய்யும்படி மக்கள் சொன்னார்கள் அதை அவர் செய்தார். நல்லாட் சியை ஏற்படுத்துவதற்காகவே மைத்திரிபால சிறிசேன கொண்டுவரப்பட்டார். அது நடந்ததா இல்லையா என் பதை இந்நாட்டு மக்கள் தீர் மானித்தனர்.

கோட்டாபய ராஜபக்ஷ தேசிய பாதுகாப்பை உறு வாக்குவதற்காக கொண்டு வரப்பட்டார். அது நடந்ததா இல்லையா என்பதை மக்கள் முடிவு செய்தார்கள். இம் முறை பொருளாதார நெருக் கடி ஏற்பட்டுள்ளது. ரணில் விக்கிரமசிங்க இந்த முறையை மாற்றுவதாகக் கூறி அதை நிரூ பித்த தலைவர். எனவேதான் ரணில் விக்கிரமசிங்கவுக்கு மீண்டுமொரு சந்தர்ப்பம் வழங் கப்படவேண்டுமென மக்கள் கருதுகின்றனர் - என்றார்.

# இப்படியும் நடக்கிறது

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதை குறியாகக் கொண்டு கடந்த சில மாதங்க ளாக செயல்பட்டு வந்த பாட் டாலி சம்பிக்க ரணவக்க - ஐக் கிய தேசியக் கட்சியின் தலைவ ரும் ஜனாதிபதியுமான ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தது பற்றி நேற்று இந்தப் பத்தியில் சில தகவல்களை தந்திருந்தேன்.

'நமது தேசத்துக்காக ஒற்று மையுடன் ஓர் அடி முன்னோக்கி' என்ற செயல்திட்டத்தை வெளியிட்டு அது தொடர்பாக அரசியல் கட்சிகளுடன் உரை யாடலை ஆரம்பித்திருக்கும் அவர், அதற்காக அனைத்துக் கட்சிகளுக்கும் கடிதம் எழுதி யிருந்தார்.

அந்தக் கோரிக்கையின் பிரகாரமே அவர் ஐக்கிய தேசி யக் கட்சியினரைச் சந்தித்திருந் தார். அதற்கு முன்னர் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேன தலைமையிலான சிறீ லங்கா சுதந்திரக் கட்சியினரைச் சந்தித்திருந்தபோதிலும் அவர்கள் எந்த விடயத்திலுமே அடுத்து என்ன செய்வது என்பது தெரியாத நிலையில் இருக்கின்ற னர் எனப் பின்னர் அவர் தெரிவித்திருந்தார்.

முன்னாள் ஜனாதிபதி சந்தி ரிகா பண்டாரநாயக்கா குமார துங்கவுடன் புதிய கூட்டணி அமைக்க முயன்று வருவதாகப் பல நாட்களாக செய்திகள் வெளி வந்தபோதிலும் அவர்களி டையே ஓர் இணக்கத்தை ஏற்படுத்த முடியவில்லை என்பதை இந்தச் சந்திப்பில் உணர்ந்துகொள்ளக்கூடியதாக இருந்ததாக சம்பிக்க தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதனால் அநேகமாக முக்கிய தலைவர்கள் அனைவரையுமே இழந்துவிட்ட பின்னர் ஒருசில புதியவர்களுடன் தனித்துவிட் டப்பட்ட நிலையில் இருக்கின்ற போதிலும் அடுத்த ஜனாதிபதி தேர்தலில் தானும் போட்டி யிடப்போவதாக மைத்திரிபால கூறிக்கொண்டிருக்கின்றாராம்.

இந்தச் சந்திப்புகளுக்கு பின்னர், கடைசியாக ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்தும் சம்பிக்கவுடனான சந்திப்புக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோதி லும் அதில் கலந்துகொள்வதை கட்சித் தலைவர் சஜித் பிரேமதா ஸவோ அல்லது அவருக்கு அடுத்த நிலையிலுள்ள லக்ஷ்மன் கிரியல்லவோ தவிர்த்துவிட்ட னர் என்றும் அது சம்பிக்கவுடன் கூட்டணி அமைக்க அவர்கள் விரும்பவில்லை என்ற தகவலை செல்லியிருப்பதாகவும் தெற்கு ஊடகங்கள் விமர்சித்திருக்கின் றன.

பாராளுமன்றத்தில் 'வழிகள் மற்றும் வழிமுறைகளுக்கான குழு'வின் தலைவராக இருந்தவர் சம்பிக்க. அண்மையில் பாராளு மன்றம் ஒத்திவைக்கப்பட்ட பின்னர், மீண்டும் அந்தக் குழுக்கள் புதிதாக அமைக்கப் பட்டபோது அந்த பதவியை அவருக்கு வழங்க ஜனாதிபதி விரும்பியபோதிலும். எதிர்க் கட்சி தரப்பினரால் அவர் நிய மிக்கப்படவேண்டும் என்பதால் அதனை அவருக்கு வழங்க சஜித் மறுத்திருந்தார்.

அந்த குழுவுக்கு சம்பிக்க தலைவராக இருந்தபோது அதற்கு புதிதாக பல அதிகாரங் களை வழங்கியிருந்தபோதிலும், எதிரணியினர் மீண்டும் சம்பிக்கவை நியமிக்காததைத் தொடர்ந்து, அரச தரப்பில் அவரை நியமிக்க ஜனாதிபதி விரும்பியிருந்தபோதிலும் அதனை சம்பிக்க ஏற்றுக் கொள்ளவில்லை என்றும் அவ ருக்கு நெருக்கமான வட்டாரங் கள் தெரிவித்திருந்தன.

நடக்கவிருக்கும் ஜனாதிபதி தேர்தலில் தான் வெற்றிபெறு வேன் என்பதில் அதீத நம்பிக்கை கொண்டிருக்கும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேம தாஸ தனது கட்சியினரையே உதாசீனம் செய்து வரும் நிலை யில், சம்பிக்கவுடனான சந்திப் பில் கலந்துகொள்ளாதது ஆச்சரி யத்துக்கு உரியதல்ல என்கின்ற னர் தெற்கின் அரசியல் விமர்சகர் கள். இப்போது அவரது கட்சிக் குள்ளேயே சிலரை ஓரம்கட்டி வருகிறார் எனப் பலரும் நம்பி வரும் நிலையில் இது அவரது கட்சிக்குள்ளேயே , பிரளயத்தை கிளப்பியிருக்கின்றது.

ஏற்கனவே பீல்ட் மர்ஷல் சரத் பொன்சேகா தொடர்பாகக் கட்சித் தலைமை நடந்து கொண்ட விதம் கட்சிக்குள் பலருக்கும் - ஏன் அவருக்கும் கூட சங்கடத்தை தந்திருந்த போதிலும் சரத் பொன்சேகா தொடர்ந்து கட்சிப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றார்.

இந்நிலையில், நேற்று முன்தினம் கடவத்தை - மகரவில் இடம்பெற்ற கட்சியின் மாபெரும் பிரசாரக் கூட்டத்தில் சரத் பொன்சேகா கலந்துகொண் டிருந்தபோதிலும், அவர் கூட் டத்தில் பேசுவதற்கு அனுமதிக் கப்படவில்லையாம். கூட்டத் தில் ஓர் ஓரமாக அவர் அமரவைக்கப்பட்டிருந்தார்.

அதைவிட முக்கியமானது அவர் பேச அனுமதிக்கப்பட் டால் தான் அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளமாட்டேன் என்று சஜித் முன்னதாகக் கட்சி யினரை மிரட்டியிருந்தாரென வும் கட்சியினரிடையே பேசப் பட்டது. இவை எல்லாமே கட்சிக்குள்ளேயே 'கொந்த ளிப்பை' ஏற்படுத்தியிருக்கின்ற தாம்.

ஜே. வி. பியின் தேசிய மக்கள் சக்திக்குள்ளும் இதுபோன்ற உட்கட்சி நெருக்கடிகள் இருக்கத் தான் செய்கின்றன. தமக்கான மக்கள் செல்வாக்கு அதிகரிக்க அவர்களும் தம்மோடு இருப் பவர்களை கண்டுகொள்வ தில்லை என்றும் ஜே. வி. பிக்கு வெளியிலிருந்த வந்த புத்திஜீவி கள் புறக்கணிக்கப்படுகின்றனர் எனவும் கூறப்பட்டுவரும் நிலை யிலேயே, ஐக்கிய மக்கள் சக்திக்குள்ளும் இதேபோன்ற நெருடல்கள் தொடங்கியிருக் கின்றன என்கின்றனர் விபரம் அறிந்தவர்கள்.

- ஊர்க்குருவி.

## சுமந்திரன் எம். பியின் தாயார் காலமானார்!



கொழும்பு, பெப். 28

இலங்கை தமிழ் அரசு கட்சி யின் பாராளுமன்ற உறுப்பின ரான எம். ஏ. சுமந்திரனின் தாயாரான புஷ்பராணி மதி யாபரணன் (வயது 85) கொழும்பில் நேற்று செவ் வாய்க்கிழமை காலமானார்.

கொழும்பு - தெகிவளை யிலுள்ள அவரின் மகளின் இல்லத்திலேயே நேற்று செவ் வாய்க்கிழமை அவர் காலமா னார். இவர், வடமராட்சி கிழக்கு குடத்தனையை சேர்ந்தவராவார்.

சுமந்திரன் எம். பியின் தா யாரின் மறைவுக்கு பல் வேறு தரப்பினரும் இரங்கல்களை தெரிவித்து வருகின்றனர்.

இதேவேளை இறுதிக் கிரியைகள் நாளை வியாழக் கிழமை கொழும்பில் நடை பெறும் என்று தெரிவிக்கப் பட்டது. (ஐ)




# மேழி எழுபது விழாவில் இரு நூல்கள் வெளியீடு

வவுனியா, பெப். 28

எழுத்தாளர் கலாநிதி மேழிக்குமரனின் எழுபது அகவையையும் 50 ஆண்டு இலக்கிய பயணத்தையும் முன்னிட்டு இரு நூல்கள் வெளி யிட்டு வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வு வவுனியா நகரசபை கலாசார மண்டபத் தில் பிரமாண்டமாக நடை பெற்றது. இதில், வவுனியா தமிழ்ச் சங்கத்தின் நிறுவுநர் தமிழருவி த.சிவகுமாரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம விருந் தினராக வவுனியா பல்க லைக்கழகத்தின் துணை வேந்தர் த.மங்களேஸ்வரன், சிறப்பு விருந்தினர்களாக ஈழமக்கள் புரட்சிகர விடு தலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிறேமசந்தி ரன், கல்வி அமைச்சின் ஓய்வு நிலை மேலதிக செயலாளர் உடுவை எஸ். தில்லை நட ராஜா,

கௌரவ விருந்தினர்க ளாக வவுனியா தேசிய கல்வி யற் கல்லூரியின் ஓய்வு நிலை பீடாதிபதி க.பேர்னாட், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் ந. சிவசக்தி ஆனந்தன், இலக்கிய வாதிகள்,சமூக ஆர்வலர்கள், திணைக்கள உத்தியோகத்தர் கள் பொதுமக்கள் என பல ரும் கலந்து கொண்டனர்.

குறித்த விழாவில் எழுத்தா ளர் கலாநிதி மேழிக்குமர னின் கொள்ளிக்காசு சிறுக தைத் தொகுப்பு நூலும் 'அல் சைமர்' மருத்துவ நூலும் வெளியிடப்பட்டன. (ஐ)

ஈழநாடு
Eelanadu
28.02.2024 புதன்கிழமை
சோபகிருது வருடம், மாசி 16

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# மீனவர் பிரச்னைக்கான தீர்வு

சிறை வைக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுவிக்குமாறு தமிழ்நாட்டு மீனவர்கள் தொடர்ந்தும் குரலெழுப்பி வருகின்றனர். இந்திய மத்திய அரசு இந்த விடயத்தில் தலையிட வேண்டுமென்று அவர்கள் ஆர்பாட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர். இதேவேளை, இந்திய மீனவர்களால் தங்களது வாழ்வாதாரம் பாதிக்கப்படுவதற்கு நிரந்தரமான தீர்வு தேவையென்று கூறிவரும் வடக்கு மீனவர் அமைப்புகள் கடலில் இறங்கி போராடுவதற்கான அழைப்பை விடுத்திருக்கின்றன. இரண்டு நாடுகளின் தமிழ் மீனவர்களும் ஏட்டிக்குப்போட்டியாக ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருவதையே காணமுடிகின்றது. தொப்புள்கொடி உறவுகளாக தங்களை அடையாளப்படுத்திக் கொண்டிருக்கும் இரண்டு பகுதி தமிழ் மீனவர்களும் தற்போது எதிரிகள் போன்றே மாறிவருகின்றனர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்களை மனிதநேய அடிப்படையில் விடுவிக்குமாறு இந்தியத் தூதுவர் மீன்பிடி அமைச்சரிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றார். தடுத்து வைக்கப்பட்டுள்ள மீனவர்கள் விடுவிக்கப்பட்டால் மட்டுமே தமிழ்நாட்டு மீனவர்களை சமாதானப்படுத்த முடியுமென்னும் நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. 'ஈழநாடு' ஏற்கனவே சுட்டிக்காட்டியது போன்று இந்தப் பிரச்னைக்கு அவ்வப்போது சமாதானப்படுத்தும் தீர்வுகள் பயனற்றவை. இதில் மூன்று தரப்புகள் தொடர்புபடுகின்றன. இலங்கை அரசாங்கம், இந்திய மத்திய அரசாங்கம் அத்துடன், தமிழ்நாட்டு அரசாங்கம்.

இந்தியா சுயாதீனமான அதிகாரமுள்ள மாநிலங்களை கொண்டிருக்கும் ஒரு நாடாகும். அந்த வகையில், மத்திய அரசாங்கம் எடுத்தோம் கவிழ்த்தோம் என்னும் அடிப்படையில் செயல்பட முடியாத நிலைமை இருக்கின்றது. அதேவேளை, மாநிலங்களின் கோரிக்கை தொடர்பிலும் இந்திய மத்திய அரசாங்கம் தலையீடுகளை மேற்கொள்ள வேண்டிய நிலைமை இருக்கின்றது. இந்த நிலையில்தான் மனிதநேய அடிப்படையில் இந்திய மீனவர்களை விடுவிக்குமாறு இந்தியத் தூதுவர் கோரிக்கை விடுத்திருக்கின்றார். உண்மையில், இந்த விடயம் மனிதநேய அடிப்படையில்தான் அணுகப்பட வேண்டும். இதேவேளை நிரந்தரமான தீர்வைக் காண்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

ஆனால், இதில் ஒரு பிரச்னை உண்டு. அதாவது, வடக்கு மாகணத்திலும் தமிழ்நாட்டிலும் உள்ளூர் அரசியல் தலையீடு செய்வதால் இரண்டு பக்கத்திலும் அரசியல்வாதிகள் பிரச்னைகளை தீர்ப்பதற்கான வழிவகைகளை ஆராய்வதற்கு பதிலாக - மீனவர் சமூகங்களின் ஆதரவை இழந்துவிடக்கூடாது என்னும் அடிப்படையிலேயே செயலாற்றுகின்றன.

இந்தியத் தூதுவரை சந்தித்து திரும்பிய மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இந்திய அழுத்தங்களுக்காக அரசாங்கம் சில நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாக இருந்தால் தான் பதவியை துறந்து மீனவர்களோடு இணைந்து கடலில் இறங்கி போராடவுள்ளார் என்று குறிப்பிட்டிருக்கின்றார். இது அடிப்படையிலேயே ஓர் அரசியல் அறிவிப்பு. ஏனெனில், குறித்த மீனவர் சமூகத்தின் வாக்குகளை இழந்துவிடக்கூடாது என்னும் அடிப்படையிலேயே இவ்வாறான அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன. ஆனால், இவ்வாறான அணுகுமுறையால் இந்தப் பிரச்னையை தீர்க்க முடியாது. ஆரம்பத்தில் இதே மீனவர் அமைப்புகள் பல, மீன்பிடி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கடலட்டை பண்ணைகளுக்கு இடமளிப்பது தங்களின் வாழ்வாதாரத்தை சிதைப்பதாக குற்றஞ்சாட்டியிருந்தனர். ஆனால், இப்போது அதனை ஒரு புறமாக வைத்துவிட்டு இந்திய மீனவர்களின் பிரச்னையை உயர்த்திப்பிடிக்கின்றனர்.

இந்தப் பிரச்னைக்கு நிரந்தரமான தீர்வை எவ்வாறு காண முடியுமென்றே மீன்பிடி அமைச்சர் சிந்திக்க வேண்டும். அதேவேளை, தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளோடு தொடர்புகளைப் பேணிவரும், தமிழ்த் தேசிய கட்சிகள் – தமிழ்நாட்டு முதலமைச்சர் மற்றும் ஏனைய தமிழ்நாட்டு அரசியல் கட்சிகளோடு இணைந்து இந்தப் பிரச்னையை எவ்வாறு கையாள முடியுமென்று சிந்திக்க வேண்டும். அதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

# வடமராட்சியின் உட்கட்டமைப்பு பிரச்னைகளுக்கு விரைவில் தீர்வு!

வடமராட்சி, பெப். 28

வடமராட்சி பிரதேச மக்களின் உட்கட்டமைப்பு பிரச்னைகளுக்கு ஆளுநரின் ஆதரவுடன் விரைவில் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் என்று உள்ளூராட்சி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் ஏற்பாட்டில் முன்னெடுக்கப்படும் ஆளுநரின் சிநேகபூர்வ மக்கள் சந்திப்பு வடமராட்சியில் நடைபெற்றது.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் ஆளுநர் பி. எஸ். எம். சார்ள்ஸின் தலைமையில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

வடமராட்சி பிரதேசத்தின் உள்ளக வீதிகள் சீரின்மை தொடர்பாக அதிகளவான முறைப்பாடுகள் ஆளுநரிடம் இதன்போது முன்வைக்கப்பட்டன. அத்துடன், விளையாட்டு மைதானம் சீரின்மை, வீதிகளுக்கான மின் விளக்குகள் பொருத்தப்படாதமை, சனசமூக நிலையங்களின் தேவைகள் உள்ளிட்ட பல விடயங்கள் தொடர்பிலும் ஆளுநரிடம் பொதுமக்களால் எடுத்துக்கூறப்பட்டன.

மக்களின் தேவைகளில் உடனடியாக நிறைவேற்றக் கூடிய விடயங்களை உரிய நடைமுறைகளை பின்பற்றி துரிதகதியில் நிறைவேற்றுமாறு அதிகாரிகளுக்கு ஆளுநரால் இதன்போது அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

வடமராட்சி பிரதேச மக்களின் கோரிக்கைகள் தொடர்பில் ஆராய்ந்து, தகவல்கள் திரட்டப்பட்டு ஆளுநரின் அனுமதியுடன் உட்கட்டமைப்பு பிரச்னைகளுக்கு விரைவில் தீர்வு பெற்றுக்கொடுக்கப்படும் என்று இதன்போது உள்ளூராட்சி ஆணையாளர் தெரிவித்தார். (ஐ)

# பெரிய புராணம் சொற்பொழிவு!

யாழ்ப்பாணம், பெப். 07

சைவ வாழ்வியலில் பெரிய புராணம் பெறும் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக சிவநெறி பிரகாசர் கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் வாராந்த பெரியபுராண சிறப்பு சொற்பொழிவு நடைபெற்று வருகின்றது.

இதன் 48ஆவது தொடர் (வாயிலார் நாயனார்) தெல்லிப்பழை சிவகாமி அம்பாள் சமேத சந்திர மௌலீஸ்வரர் ஆலய பிரதான மண்டபத்தில் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

சேக்கிழார் பெருமானின் குருபூசையைத் தொடர்ந்து சொற்பொழிவைச் இளம் சைவப்புலவர் க. கயிலைநாதன் 'அகக்கோவிலில் பெருமானை எழுந்தருள செய்து வழிபட்ட நாயனார்' என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றுவார். (ஐ)

# ரொஷான் ஜயசுமண நயினாதீவு வருகை!

யாழ்ப்பாணம், பெப். 28

பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க மற்றும் பதில் சுகாதார அமைச்சர் சன்ன ஜயசுமண ஆகியோர் நேற்றுமுன்தினம் நயினாதீவு ராஜமஹா விகாரைக்கு சென்று வழிபட்டனர்.

இதில் சமய ஆசி உரைகளும் மதத் தலைவர்களினால் நிகழ்த்தப்பட்டன.

ரொஷான் ரணசிங்க எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுவதற்கு திட்டமிட்டு வருகின்றார். இதன் அடிப்படையிலேயே அவர் நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணம் வந்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மோகனதாஸ் சுவாமிகளுக்கு 'சிறந்த ஆன்மீகவாதி' விருது





வடமராட்சி, பெப். 28

செல்வச்சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் மோகனதாஸ் சுவாமிகளுக்கு 'சிறந்த ஆன்மீகவாதி' விருது தமிழ்நாடு ஏ. பி. ஜே. அறக்கட்டளையால் வழங்கிக் கௌரவிக்கப்பட் டுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் தனியார் விடுதியில் நடந்த இந்த நிகழ்வில் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், மூத்த அறிவிப்பாளர் அப்துல் ஹமீத், ஏ. பி. ஜே. அறக்கட்டளை நிர்வாகிகள் மற்றும் மதத் தலைவர்கள் பங்கேற்றிருந்தனர். (ஐ-2)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
அரசால் அனுகூலம் உண்டு. மற்றவர்களால் பயனடைவீர்கள். வியாபாரத்தில் பற்று வரவு உயரும். உயரதிகாரிகள் அதிசயிக்கும்படி நடந்துக் கொள்வீர்கள். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**இடபம்**
உங்களை சுற்றியிருப்பவர்களின் சுயரூபம் தெரிய வரும். கை ஓங்கும். பழைய நட்பால் ஆதாயம் உண்டு. நெளிவு சுளிவுகளை கற்றுக் கொள்வீர்கள். சலுகைகள் கிடைக்கும். கனவு நனவாகும்.

**மிதுனம்**
திட்டமிட்ட காரியங்கள் தடையின்றி முடியும். வீடு வாகனத்தை சீர்செய்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஆதரிப்பார்கள். மேலதிகாரிகளின் ஆதரவு உண்டு. உழைப்பால் உயரும் நாள்.

**கடகம்**
உடன்பிறந்தவர்கள் வளர்ச்சிக்கு சாதகமாக இருப்பார்கள். புது வாடிக்கையாளர்கள் வருவார்கள். உத்தியோகத்தில் உயரதிகாரி சில சூட்சுமங்களை சொல்லித் தருவார். வெற்றிக்கு வித்திடும் நாள்.

**சிம்மம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த மன உளைச்சல் நீங்கி எதிலும் தெளிவு பிறக்கும். உடல் நலம் சீராகும். வியாபாரத்தில் இழந்ததை மீட்பீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும். மகிழ்ச்சியான நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் தோல்வி மனப்பான்மையால் மன இறுக்கம் அதிகரிக்கும். கூடுதலாக வேலைப் பார்க்க வேண்டி வரும். விட்டுக் கொடுத்துப் போக வேண்டிய நாள்.

**துலாம்**
எதிர்காலம் பற்றிய வீண் டென்ஷன் வந்து செல்லும். வியாபாரத்தில் போராடி லாபம் ஈட்டுவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் பிரச்னைகள் வரக்கூடும். கவனம் தேவைப்படும் நாள்.

**விருட்சிகம்**
எதையும் சமாளிக்கும் சாமர்த்தியம் பிறக்கும். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் புது ஒப்பந்தங்களால் லாபம் பெருகும். பாராட்டுவார்கள். மதிப்பு கூடும் நாள்.

**தனுசு**
உறவினர்கள், நண்பர்கள் ஆதரவாகப் பேசத் தொடங்குவார்கள். வியாபாரத்தில் எதிர்பாராத தன லாபம் உண்டு. உத்தியோகத்தில் சக ஊழியர்கள் மதிப்பார்கள். சாதித்துக் காட்டும் நாள்.

**மகரம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன் - மனைவிக்குள் இருந்த பிணக்குகள் நீங்கும். வியாபாரத்தில் பற்று வரவு கணிசமாக உயரும். பழைய சிக்கல்கள் தீரும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிலர் உங்களை சீண்டிப் பார்ப்பார்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகளை போராடி விற்பீர்கள். ஈகோ பிரச்னை வந்து நீங்கும். வேலைச்சுமை மிகுந்த நாள்.

**மீனம்**
பிள்ளைகள் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள். ஆடை, ஆபரணம் சேரும். வியாபாரத்தில் வேலையாட்கள் ஒத்துழைப்பார்கள். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். திறமைகள் வெளிப்படும் நாள்.

# தி. மு. கவுடன் தொகுதி பங்கீட்டில் சிக்கல் காங்கிரஸ் தமிழக தலைவர் டில்லி விரைவு

சென்னை, பெப். 28

தி. மு. க.வுடனான தொகுதிப் பங்கீட்டில் சிக்கல் நிலை நீடிப்பதால் காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு தலைவர் செல்வப்பெருந்தகை புதுடில்லி சென்றுள்ளார்.

கடந்த 2019 மக்களவை தேர்தலில் தி. மு. க. கூட்டணியில் இடம்பெற்றிருந்த காங்கிரஸ் 10 இடங்களில் போட்டியிட்டு 9 இடங்களில் வெற்றி பெற்றது. இம்முறை தி. மு. க. கூட்டணியில் கொங்கு மக்கள் தேசிய கட்சி, நடிகர் கமல்ஹாசன் ஆகியோருக்கும் இடம் ஒதுக்க வேண்டியுள்ளது. தே. மு. தி. கவும் கூட்டணியில் இடம்பெறும் என்ற எதிர்பார்ப்பு உள்ளது. இதனால் காங்கிரஸுக்கு 8 தொகுதிகள் ஒதுக்குவது எனவும், அதில் ஒன்றை கமல்ஹாசனுக்கு வழங்க வேண்டும் என்றும் தி. மு. க. தரப்பிலிருந்து தகவல் தெரிவிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

காங்கிரஸ் கடந்த தேர்தலில் பெற்ற தொகுதிகளின் எண்ணிக்கையைவிட குறைவாக பெற விரும்பவில்லை. தி. மு. க. 8 தொகுதிகளுக்கு மேல் கிடையாது என திட்டவட்டமாக கூறிவிட்டதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில் அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பாக முடிவெடுக்க அகில இந்திய காங்கிரஸ் பொதுச்செயலாளர் கே. சி. வேணுகோபால் அழைப்பின் பேரில் நேற்று செல்வப்பெருந்தகை டில்லி சென்றுள்ளார்.

கட்சியின் அகில இந்திய தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவை அழைத்து வந்து தி. மு. கவுடன் தொகுதிப் பங்கீடு குறித்து பேசுவது என முடிவெடுத்திருப்பதாக கூறப்படுகிறது. மேலும், போட்டியிடும் வேட்பாளர்களின் பெயர்களை இறுதி செய்யவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# கருணாநிதி நினைவிடத்தை திறந்து வைத்தார் முதல்வர்!



சென்னை, பெப். 28

சென்னை மெரினாவில் உள்ள முன்னாள் முதலமைச்சர் கருணாநிதியின் நினைவிடத்தை முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் நேற்று முன்தினம் இரவு திறந்து வைத்தார்.

முன்னதாக, பேரறிஞர் அண்ணாவின் சிலையை முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் திறந்து வைத்து மலர் தூவி மரியாதை செலுத்தினார். பேரறிஞர் அண்ணாவின் புதுப்பிக்கப்பட்ட நினைவிடத்தையும் முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் திறந்து வைத்தார்.

மேலும், அண்ணா நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து முதல்வர் ஸ்டாலின் மரியாதை செலுத்தினார்.

பின்னர், கருணாநிதி நினைவிடம் முன்பு நிறுவப்பட்டுள்ள சிலையை முதல்வர் திறந்து வைத்தார். பின்னர், கருணாநிதி சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

பா. ஜ. க. எம்எல்ஏக்கள் எடப்பாடி பழனிசாமி தலைமையில் அதிமுகவில் இணைவதாக அதிமுக எம்.எல்.ஏ அம்மன் அர்ஜுனன் பரபரப்பு தகவலை தெரிவித்துள்ளனர். (ஐ)

# கமல் - ஸ்டாலின் இன்று சந்திப்பு!

சென்னை, பெப். 28

தி. மு. க. - மக்கள் நீதி மய்யம் கட்சிகளுக்கு இடையே தொகுதி பங்கீடு தொடர்பாக கமல்ஹாசன் இன்று புதன்கிழமை முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் சந்திக்கவுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

மக்களவைத் தேர்தலில் தி. மு. க. தலைமையிலான கூட்டணியின் தொகுதி பங்கீடு பேச்சு 2ஆம் கட்டத்தை எட்டியுள்ளது. இதில், இந்திய யூனியன் முஸ்லிம் லீக், கொங்கு மக்கள் தேசிய கட்சிகளுக்கு தலா ஒரு தொகுதி ஒதுக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் இன்று புதன்கிழமை தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலினை மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமலஹாசனை சந்திக்கவுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இந்த சந்திப்பில் பாராளுமன்ற தேர்தலில் கூட்டணிக்கான பேச்சு நடைபெறவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2019 மற்றும் 2021 பொது தேர்தல்களில் 61 சட்டமன்ற தொகுதிகளில் போட்டியிட்டு 7.35 சதவீதம் முதல் 9.62 சதவீதம் வாக்கு பெற்றதால் மக்கள் நீதி மய்யத்துக்குக் குறைந்தது 2 தொகுதிகள் வேண்டும் என மக்கள் நீதி மையம் கேட்டு வருவதாக தகவல் வெளியாகியுள்ளது.

# தமிழ்நாட்டில் மிகப்பெரிய கட்சி நாம் தமிழர்தான்!

சென்னை, பெப். 28

தனித்து நின்றாலும் நாங்கள் தனித்துவத்தோடு நிற்கிறோம். அதனால் நாம் தமிழர் கட்சிதான் பெரிய கட்சி. 40 தொகுதியிலும் நான்தான் தனித்து போட்டியிடுகிறேன் - இவ்வாறு கூறியுள்ளார் நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான்.

நீங்கள் இப்படித்தான் (தனித்து) என்னை ஏற்க வேண்டும். என்னையென்றால் நான் கொண்டுள்ள தத்துவத்தை நீங்கள் ஏற்க வேண்டும். நான் தமிழ், தமிழர், தமிழ்த் தேசியத்தை முன்னெடுத்து பேசி வருகிறேன். நான் பேசுகிற அரசியலை எடப்பாடி பழனிசாமி பேசுகிறாரா? இல்லையா? இன்று அவர் வைத்திருக்கும் முழக்கம் என்ன? தமிழர் உரிமை மீட்போம். தமிழ்நாட்டை காப்போம் என்கிறார். இதைத்தானே நான் தொடர்ச்சியாக பேசி வருகிறேன்.

இப்படி எனது அரசியலை ஏற்று உங்கள் கருத்தை ஏற்கிறேன் என்று என்னோடு பயணிக்க யாராவது வந்தால் அதுபற்றி அப்போது யோசிக்க வேண்டும். அதே நேரத்தில் முறைகேடாக ஆட்சி செய்து வழக்குகளை சந்தித்தவர்களுடன் சேர்ந்தால் அவர்கள் மீது இருக்கும் கோபம் எங்கள் மீதும் திரும்ப வாய்ப்பு உள்ளது.

புதிய ஆற்றல்களாக அமைப்புகள் வந்தால் அவர்களோடு கூட்டணி சேர்ந்து பயணிக்கலாம். அதற்கு நாம் தமிழர் கட்சி தயாராக உள்ளது. மற்றவர்களின் தோள் மீது ஏறி நின்று நான் உயரமானவன் என்று காட்டிக் கொள்வதை விட தனித்து நின்று உண்மையான உயரத்தை காட்டுபவர்களே மேலானவர்கள். அப்படி இருக்கும்போது மக்களுக்கு முன்பு நான் ஏன் போலியான உருவத்தை காட்ட வேண்டும்.

நான் இவ்வளவுதான் என்று தனித்து நின்று உண்மையான உருவத்தை காட்டிவிட்டு போய் விட வேண்டியதுதானே? தனித்து நின்றாலும் நாங்கள் தனித்துவத்தோடு நிற்கிறோம். அதனால் நாம் தமிழர் கட்சிதான் பெரிய கட்சி. 40 தொகுதியிலும் நான்தான் தனித்து போட்டியிடுகிறேன்.

எனக்கு முன்பு விஜயகாந்த் மட்டுமே அப்படி களம் கண்டுள்ளார். 2014ஆம் ஆண்டு ஜெயலலிதா அதுபோன்று தனித்து போட்டியிட்டு தேர்தலை சந்தித்து 37 இடங்களிலும் வெற்றி பெற்றார். பாராளுமன்ற தேர்தலில் 40 தொகுதியிலும் சட்டமன்ற தேர்தலில் 234 தொகுதியிலும் தனித்து போட்டியிட போகிறோம். எனவே, நாங்கள்தான் பெரிய கட்சி. தனித்து நிற்பதற்கு இப்போது யாருக்கும் தைரியம் இல்லை என்பதே உண்மையாகும் - என்றார். (ஐ)

# ரணில் நாட்டு மக்களினால் நிராகரிக்கப்பட்ட தலைவர்!

## கூறுகிறார் ரஞ்சித் மத்தும பண்டார



கொழும்பு, பெப். 28

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மக்களால் நிராகரிக்கப்பட்ட தலைவர் என்பதால். அப்படியான ஒருவர் ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவார் என நினைக்கவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்தார்.**

கினிகத்தேன ஐக்கிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் நடைபெற்ற நுவரெலியா மாவட்டத்தின் மஸ்கெலியா தேர்தல் தொகுதியின் உறுப்பினர்களுடனான சந்திப்பின் பின்னர் அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஐக்கிய மக்கள் சக்தி, கிராம, தொகுதி உட்பட அனைத்து மட்டங்களிலும் தேர்தல் பிரசார நடவடிக்கைகளை ஆரம்பித்துவிட்டது. ரணில் விக்ரமசிங்க மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒருவர். அவர் தேர்தலில் போட்டியிடுவார் என நான் நினைக்கவில்லை.

ஐக்கிய மக்கள் சக்தி வெற்றி பெறவேண்டுமாயின் சகல அணிகளையும் இணைத்துக்கொள்வது அவசியம். அத்துடன் பொதுஜன பெரமுனவுக்கு வாக்களித்தவர்களையும் இணைத்துக்கொள்ள வேண்டும்-என்றார்.

(அ)

# மீண்டும் அரசமைப்பு மீறல்!

## எதிர்க்கட்சித் தலைவர் குற்றஞ்சாட்டு




கொழும்பு, பெப். 28

புதிய பொலிஸ் மா அதிபரின் நியமன விடயத்தில் மீண்டும் அரசியலமைப்பு மீறப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

நாட்டின் 36 ஆவது பொலிஸ்மா அதிபராக தேசபந்து தென்னக்கோன் ஜனாதிபதியினால் நேற்று முன் தினம் நியமிக்கப்பட்டிருந்தார்.

“அரசியலமைப்பு பேரவை பொலிஸ் மா அதிபர் நியமனத்தை அங்கீகரிக்கவில்லை. ஆதரவாக 4 வாக்குகளும், எதிராக 2 வாக்குகளும் மற்றும் 2 பேர் வாக்களிப்பதை தவிர்த்தும் இருந்தனர். முடிவெடுக்க குறைந்த பட்சம் 5 வாக்குகள் தேவை. இதன்மூலம் இரண்டாவது முறையாகவும் அரசியலமைப்பு அப்பட்டமாக மீறப்பட்டுள்ளது” என்று குற்றம் சாட்டினார்.

(அ)

# யாழில் தீ பரவல் சேதமானது வீடு!

யாழ்ப்பாணம், பெப். 28

புத்தூரில் உள்ள வீடொன்று நேற்று முன் தினம் இரவு தீப்பிடித்து எரிந்து சேதமானது.

புத்தூர் கலைமதிப் பகுதியில் உள்ள வீடொன்றில் நேற்று முன் தினம் இரவு 8.30 மணியளவில் தீப்பரவியது.

இதனையடுத்து தீயணைப்பு படையினர் சம்பவ இடத்திற்கு விரைந்து தீப்பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

உயிர் சேதம் ஏதும் ஏற்படாத நிலையில் மின்கசிவு காரணமாகவே வீடு தீப்பிடித்து எரிந்தாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பாக அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ)

# காஸாவில் பாதிப்புற்ற குழந்தைகளுக்கு நேசக்கரம் நீட்டுகின்றது இலங்கை அரசு

கொழும்பு, பெப். 28

காஸா எல்லை பகுதிகளில் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு நிவாரணங்களைப் பெற்றுக்கொடுப்பதற்காக நிதியம் ஒன்றை காஸாவில் நிறுவுவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி இப்தார் நிகழ்வுகளுக்காக அமைச்சுக்கள் மற்றும் அரச நிறுவனங்களினால் ஒதுக்கப்படும் தொகையை இந்த நிதியத்திற்கு பெற்றுத்தருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், இதற்காக மக்களின் ஒத்துழைப்பும் எதிர்பார்க்கப்படுவதோடு, பாதிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு நிவாரணங்களை வழங்குவதற்காக இலங்கை அரசாங்கத்தினால் ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிடப் பிரிதிநிதியூடாக ஒரு மில்லியன் அமெரிக்க டொலர்களும் பெற்றுக் கொடுக்கப்ப டவுள்ளது.

(அ)

# புதிய சிறைச்சாலைகளை அமைக்க அரசு நடவடிக்கை

கொழும்பு, பெப். 28

சிறைச்சாலைகளில் காணப்படும் நெரிசல் தொடர்பான பிரச்னைக்கு தீர்வு காண புதிய சிறைச்சாலைகளை அமைப்பது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தி வருவதாக நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

சில சட்ட சீர்திருத்தங்கள் மற்றும் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் விசேட நடவடிக்கைகள் காரணமாகவே தற்போது சிறைச்சாலையில் கைதிகளின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கு பிரதான காரணம் என நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தேவைக்கு ஏற்ப புதிய சிறைகள் விரைவில் நிறுவப்படும் என்றும் சிறைச்சாலைகள் நிரம்பி வழிவதைக் காரணம் காட்டி சட்ட நடவடிக்கைகளை தாமதப்படுத்த முடியாது என்றும் அமைச்சர் விஜயதாச தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் உள்ள சிறைச்சாலைகளில் ஏற்படக் கூடிய நெரிசலைத் தவிர்ப்பதற்கு சிறைச்சாலைகள் திணைக்களம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்துள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களத்தின் பேச்சாளர் காமினி பி.திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

தற்போது நடைபெற்று வரும் புதிய கட்டடங்களின் நிர்மாணப் பணிகளை விரைவுபடுத்தும் அதேவேளையில், குறிப்பிட்ட பிரச்னைக்கு தீர்வாக, கைதிகளை திறந்தவெளி சிறைச்சாலைகளுக்கு மாற்றுவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(அ)

# 13 வயது சிறுமியை வேலைக்கு அமர்த்திய பெற்றோரை கைது செய்யுமாறு உத்தரவு!

யாழ்ப்பாணம், பெப். 28

உணவுப் பொருள் விற்பனையில் 13 வயதுச் சிறுமியை ஈடுபடுத்திய பெற்றோரை கைது செய்து நீதிமன்றில் முற்படுத்துமாறு யாழ்ப்பாண பொலிஸாருக்கு யாழ்.நீதவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி திருமுறிகண்டி பகுதியை சேர்ந்த 13 வயதுச் சிறுமி ஒருவர் யாழ்,நகர் பகுதியில் விற்பனை செய்த உணவுப் பொருட்கள் காலாவதியாகியவை என தெரியவந்த நிலையில் யாழ்ப்பாண பொலிஸாரினால் சிறுமி கைது செய்யப்பட்டார்.

சிறுமியிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணையில், திருமுறிகண்டி பகுதியில் உள்ள தனது வீட்டில் இருந்து தினமும், உணவுப் பொருட்களுடன் பிற்பகல் 1.30 மணியளவில் பஸ் ஏறி யாழ்ப்பாணம் வந்து அவற்றை விற்பனை செய்துவிட்டு மீண்டும் இரவு 08 மணியளவில் யாழ்ப்பாணத்தில் இருந்து பஸ்ஸில் வீட்டுக்கு செல்வதாக கூறியுள்ளார்.

இது தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸாரினால் யாழ். நீதவான் நீதிமன்றின் கவனத்திற்கு செல்லப்பட்ட நிலையில், 13 வயதுச் சிறுமியை தனியாக வேலைக்கு அமர்த்தியமை உள்ளிட்ட குற்றச்சாட்டில் பெற்றோர்களை கைது செய்து மன்றில் முற்படுத்துமாறு மன்று உத்தரவிட்டுள்ளது.

(அ)

# கணவரின் தாக்குதலுக்கு இலக்கான மனைவி சிகிச்சை பலனின்றி மரணம்!

கொழும்பு, பெப். 28

கணவரின் தாக்குதலுக்கு இலக்காகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மனைவி சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் புத்தளம், நுரைச்சோலை பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் புத்தளம், நுரைச்சோலை பிரதேசத்தை சேர்ந்த 13 மற்றும் 8 வயதுடைய இரு பிள்ளைகளின் தாயாவார்.

இவர் தனது பாட்டியின் வீட்டில் தங்கியிருந்தபோது குறித்த வீட்டுக்கு வந்த கணவர் மனைவியை தடியால் தாக்கி காயப்படுத்தியுள்ளதோடு காயமடைந்தவரை வைத்தியசாலைக்கு செல்ல விடாமல் தகராறு செய்துள்ளார்.

இந்நிலையில் காயமடைந்தவர் வீட்டினுள் வீழ்ந்து கிடந்தபோது உறவினர் ஒருவரின் உதவியுடன் முச்சக்கரவண்டியில் அழைத்துச் செல்லப்பட்டு புத்தளம் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இவர் நேற்று அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து சந்தேக நபரான கணவர் புத்தளம் பிரதேசத்தில் வைத்து பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# 24 மணித்தியாலங்களில் 730 சந்தேகநபர்கள் கைது

கொழும்பு, பெப். 28

யுக்திய சுற்றிவளைப்பு நடவடிக்கையில் மேலும் 730 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்று அதிகாலை 12.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புகளின்போது சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெலிகம - மிரிஸ்ஸ பகுதியில் முன்னெடுக்கப்பட்ட யுக்திய சுற்றிவளைப்பில் ஐஸ் போதைப்பொருளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த நபர்களிடமிருந்து 10 கிராமுக்கும் அதிகமான ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

8 இலட்சம் பெறுமதியுடைய போதைப்பொருளே இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, நேற்று முன் தினம் கைது செய்யப்பட்டவர்களில் போதைப்பொருள் குற்றங்களுடன் தொடர்புடையவர்கள் 526 பேரும் குற்றத்தடுப்பு பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டுள்ள பட்டியலில் பெயரிடப்பட்டுள்ள 204 சந்தேகநபர்களும் அடங்குவதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஹெரோயின், ஐஸ், கஞ்சா, மாவா போதை வில்லைகள் உள்ளிட்ட பல போதைப்பொருட்களையும் இந்த சுற்றிவளைப்பின் போது பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

போதைப்பொருளுடன் தொடர்புடைய குற்றங்களுக்காக கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களில், பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்பு பணியகம் பொலிஸ் விசேட பணியகத்தின் பட்டியலில் இருந்த 24 சந்தேகநபர்களும் உள்ளடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

(அ)

# வெளிநாட்டுக்கு அனுப்புவதாகக் கூறி யாழ்ப்பாணத்தில் பெரும் பண மோசடி

## தப்பியோட முற்பட்ட இளைஞர் கைது

**யாழ்ப்பாணம், பெப். 28**

**கனடாவுக்கு அனுப்புவதாக குறிப்பிட்டு யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஒருவரிடம் 1 கோடியே 25 இலட்சம் ரூபாவை மோசடி செய்த, மானிப்பாய் பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.**

தமிழர் விடுதலை கூட்டணி சார்பில் தேர்தலில் போட்டியிட்டு மானிப்பாய் பிரதேசசபை உறுப்பினரான இளைஞன் ஒருவரே கைது செய்யப்பட்டார்.

மானிப்பாய் பிரதேசசபை உறுப்பினராகிய சிறிது காலத்திலேயே அவர் வெளிநாடு சென்றுள்ளார். பின்னர் திரும்பி வந்து, பண மோசடியில் ஈடுபட்டுள்ளார். யாழ்ப்பாணத்தை சேர்ந்த ஒருவரை கனடாவுக்கு அனுப்புவதாக குறிப்பிட்டு 2022- 2023 ஆம் ஆண்டு காலப்பகுதியில் கட்டம் கட்டமாக 1 கோடியே 25 இலட்சம் ரூபாவை பெற்றுள்ளார்.

பணம் கொடுத்தும் வெளிநாடு அனுப்பப்படாதது குறித்து சம்பந்தப்பட்டவர் வினவ ஆரம்பித்த போது, முன்னாள் பிரதேசசபை உறுப்பினர் அவரை தவிர்த்து, தலைமறைவாகி விட்டார்.

அவர் திருகோணமலை உள்ளிட்ட பல பகுதிகளில் இவ்வாற பண மோசடியில் ஈடுபட்டமை விசாரணையில் தெரிய வந்தது. அவர் மீது திருகோணமலை, மல்லாகம் நீதிமன்றங்களில் பண மோசடி வழக்குகள் நடந்து வருகின்றன. பணம் மோசடி செய்து ஆடம்பரமாக செலவு செய்வதே அவரது வழக்கம் என தெரிய வந்துள்ளது.

நேற்று முன்தினம் தனது வீட்டுக்கு சென்ற பிரதேச சபை உறுப்பினர், வெளிநாடு செல்வதற்காக கொழும்பு நோக்கி சொகுசு பேருந்தில் பயணித்தார். யாழ்ப்பாணம் செம்மணி பகுதியில் பேருந்தை வழிமறித்த பொலிசார் அவரை கைது செய்தனர்.

(அ)

# இந்த மாதம் முதல் 18 நாட்களில் மட்டும் 138,736 சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு!

ශ්‍රී ලංකා සංචාරක සංවර්ධන අධිකාරිය
Sri Lanka Tourism Development Authority

கொழும்பு, பெப். 28

இந்த மாதத்தின் முதல் 18 நாட்களில் மாத்திரம் 138,736 சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகைத்தந்துள்ளனர்.

சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை வெளியிட்டுள்ள புதுப்பிக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, குறித்த காலப்பகுதியில் ரஷ்யாவில் இருந்தே அதிகளவான சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

ரஷ்யாவில் இருந்து 20 ஆயிரத்து 101 பேரும், இந்தியாவில் இருந்து 18 ஆயிரத்து 564 பேரும், சீனாவில் இருந்து 10 ஆயிரத்து 696 பேரும் நாட்டுக்கு வருகைத் தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

கடந்த ஜனவரி மாதத்தில் 2 இலட்சத்து 82 ஆயிரத்து 53 சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வருகைத்தந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

(அ)

## பத்தாயிரம் ரூபாவை இலஞ்சமாக பெற்ற இரு பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைது!

கொழும்பு, பெப். 28

போக்குவரத்து விதிமீறலை மறைப்பதற்காக பத்தாயிரம் ரூபா இலஞ்சம் பெற்ற இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர்கள் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக களுத்துறை உயர் பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இத்தபான பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்துப் பிரிவின் கான்ஸ்டபிள்கள் இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தலைக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிளில் பயணித்த நபரின் சாரதி அனுமதிப்பத்திரத்தை குறித்த இரு பொலிஸாரும் கைப்பற்றியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பின்னர் குற்றப்பத்திரம் வழங்காது சாரதி அனுமதிப்பத்திரத்தை மீள வழங்குவதற்காக இவ்வாறு இலஞ்சம் பெற்றதாக அந்தப் பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

(அ)

# வெளிநாட்டு வேலை வாங்கித் தருவதாக மோசடியில் ஈடுபட்டாரா சிங்கள நடிகை?

கொழும்பு, பெப். 28

கொரிய வேலை வாங்கித் தருவதாகக் கூறி மூத்த நடிகை தமிதா அபேரத்னவும் அவரது கணவரும் 30 இலட்சம் ரூபாவை மோசடி செய்த சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கோட்டை நீதவான் திலின கமகேவிடம் அறிவித்தது.

கொரியாவுக்கு அனுப்புவதாகக் கூறி தமிதா அபேரத்ன மற்றும் அவரது கணவரினால் 30 இலட்சம் ரூபாவுக்கும் அதிகமான பணம் மோசடி செய்யப்பட்டுள்ளதாக குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிமன்றில் அறிவித்துள்ளனர். இருவரும் சந்தேக நபர்களாக குறிப்பிடப்பட்டுள்ளதா என கோட்டை நீதவான் அப்போது வினவினார்.

"இதுவரை எந்த சந்தேக நபர்களும் பெயரிடப்படவில்லை. விசாரணையில் உள்ளது. விசாரணைக்கு வருமாறு தகவல் அளித்தும் அவர்கள் வரவில்லை" எனவே நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு நோட்டீஸ் வழங்குமாறு கோட்டை நீதவானிடம் பொலிஸார் கோரினர்.

"சந்தேக நபரின் பெயர் குறிப்பிடப்படாவிட்டால் நோட்டீஸ் வழங்க முடியாது. ஒழுங்கான முறையில் கட்டளைகளைக் கேளுங்கள்" என குறிப்பிட்ட நீதவான், அந்த கோரிக்கையை நிராகரித்தார்.

# அரச அதிகாரிகளின் தொலைபேசிகளில் 49 வீதமானவை செயலிழந்த நிலையில்!

கொழும்பு, பெப். 28

பொதுச் சேவையை மேலும் வினைத்திறனாக்குவதற்காக அரசாங்க அதிகாரிகளுக்கு தனிப்பட்ட பாவனைக்காக வழங்கப்பட்ட தொலைபேசிகளில் 49 வீதமானவை செயலிழந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிவரக் கற்கைகள் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் குறித்த விடயம் தெரியவந்துள்ளது.

கிராம உத்தியோகத்தர்கள் முதல் சமூர்த்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் வரை இந்த நிலைமை காணப்படுவதாக பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் 589 அரச அதிகாரிகளின் மாதிரியைக் கொண்டு நடத்தப்பட்ட இந்த ஆய்வில், 22 வீத அதிகாரிகள் தொலைபேசி அழைப்புகளுக்குப் பதிலளிப்பதில்லை என்பது மேலும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

(அ)

## உள்நாட்டு இறைவரி திணைக்களத்தில் 380 ஊழியர்களுக்கான வெற்றிடங்கள்!

கொழும்பு, பெப். 28

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் 380 ஊழியர்களுக்கான வெற்றிடங்கள் காணப்படுவதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன் காரணமாக தமது சேவைகளை முன்னெடுத்துச் செல்வதில் இடையூறு ஏற்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் குறிப்பிட்டார்.

ஊழியர் பற்றாக்குறை தொடர்பில் நிதி அமைச்சுக்கு அறிவித்துள்ளதாக குறித்த அதிகாரி கூறினார்.

உதவி ஆணையாளர்கள் 221 பேருக்கும் அலுவலக உதவியாளர்கள் 71 பேருக்கும் முகாமைத்துவ ஊழியர்கள் 88 பேருக்கும் வெற்றிடங்கள் காணப்படுவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(அ)

## திருமணத்துக்கு பணம் தேடிக்கொள்ள தாயின் உதவியுடன் கஞ்சா விற்ற இளைஞர்!

கொழும்பு, பெப். 28

தனது திருமணத்துக்குத் தேவையான பணத்தைத் தேடிக்கொள்வதற்காக கஞ்சா விற்பனை செய்த ஒபத்த கொட்டுகொட பிரதேசத்தில் வசிக்கும் இளைஞர் ஒருவரும் அவருக்கு உறுதுணையாக இருந்த தாயாரும் ஜா -எல பொலிஸ் நிலைய குற்றப்பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து 2 கிலோ 170 கிராம் கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளது.

24 வயதுடைய சந்தேக நபருக்கு எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் திருமணம் நடைபெறவுள்ளதாகவும் அதற்கு 15 இலட்சம் ரூபா பணம் தேவைப்படுவதாகவும் பணத்தைப் பெற்றுக்கொள்ள முறையான வழியில்லாததால்



தனது தந்தையிடமிருந்து பெறப்பட்ட 5 இலட்சம் ரூபாவை கொடுத்து கஞ்சாவை வாங்கி விற்பனை செய்து வந்தமையும் தெரியவந்துள்ளது.

இவ்வாறு வாங்கிய கஞ்சாவை தனது தாயின் உதவியுடன் சிறிய அளவில் விற்பனை செய்து வந்துள்ளமை மேலதிக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

(அ)

# இலங்கையின் மொத்த கடன் 28,095 பில்லியன் ரூபாவானது

## 15 மாதங்களில் 3,424 பில்லியன் ரூபா கடன்

கொழும்பு, பெப். 28

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தமது நிர்வாக காலத்தில் பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்டுள்ளதாக அரசாங்கமும், அவருக்கு நெருக்கமானவர்களும் அடிக்கடி கூறினாலும் நாடு அப்படியான நிலைமையில் இல்லை என்பது மத்திய வங்கி வெளியிட்டுள்ள அறிக்கை மூலம் தெரியவந்துள்ளது.

இலங்கை மத்திய வங்கி வாராந்தம் வெளியிடும் பொருளாதார புள்ளிவிபரங்களுக்கு அமைய கடந்த 2022 ஆம் ஆண்டு ஜூலை மாதம் நாடாளுமன்றத்தினால் ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட போது, அரசின் மொத்த கடன் தொகையானது 24 ஆயிரத்து 671 பில்லியன் ரூபாவாக காணப்பட்டுள்ளது.

கடந்த 2023 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாத இறுதியில் அந்த கடன் தொகையானது 28 ஆயிரத்து 95 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது.

இதனடிப்படையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் 15 மாத கால ஆட்சியின் கீழ் நாட்டின் மொத்த கடன் தொகையானது 3 ஆயிரத்து 424 பில்லியன் ரூபாவால் அதிகரித்துள்ளது.

அத்துடன் கடந்த வருடத்தின் முதல் 11 மாதங்களின் வரவு -செலவுத் திட்டத்தின் துண்டு விழும் தொகையானது மிகப் பெரிய அளவில் அதிகரித்துள்ளது.

கடந்த 2022 ஆம் ஆண்டு முதல் நவம்பர் வரையான 11 மாதத்தில் வரவு-செலவுத் திட்டத்தின் துண்டு விழும் தொகையானது ஆயிரத்து 601 பில்லியன் ரூபாவாக இருந்ததுடன், கடந்த 2023 ஆம் ஆண்டின் 11 மாத காலத்தில் வரவு-செலவுத் திட்டத்தின் துண்டு விழும் தொகையானது 2 ஆயிரத்து 20 பில்லியன் ரூபாவாக அதிகரித்துள்ளது என மத்திய வங்கியின் வாராந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

(அ)

# மத்திய வங்கி மக்களிடம் மன்னிப்பு கோரவேண்டும்

## உதய கம்மன்பில கோரிக்கை

**கொழும்பு, பெப். 28**

**பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு நாட்டு மக்கள் அர்ப்பணிக்க வேண்டும் என்று உபதேசம் வழங்கும் மத்திய வங்கியின் ஆளுநர் தான் சம்பள அதிகரிப்பு தொடர்பான யோசனையை மத்திய வங்கியின் நிதி சபைக்கு முன் வைத்துள்ளார். மத்திய வங்கியின் பணியாளர்கள் மாத்திரமல்ல ஒட்டுமொத்த மக்களும் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ளார்கள் அவ்வாறாயின் அனைவருக்கும் சம்பளத்தை அதிகரிக்க வேண்டும். முறையற்ற வகையில் செயற்படும் மத்திய வங்கி நாட்டு மக்களிடம் மன்னிப்பு கோர வேண்டும் என பிவிதுரு ஹெல உறுமய கட்சியின் தலைவரும்,பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில்-

மத்திய வங்கியின் ஆளுநர் உட்பட அதன் பணியாளர்களின் சம்பளம் 70 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளன.பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் சம்பளம் ஆயிரம் ரூபாவில் அதிகரிக்கப்படாத நிலையில் மத்திய வங்கியின் பணியாளர்களின் சம்பளம் இலட்சக்கணக்கில் அதிகரிக்கப்பட்டுள்ளன.பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு நாட்டு மக்கள் அர்ப்பணிக்க வேண்டும் என்று உபதேசம் வழங்கும் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க சம்பள அதிகரிப்பு தொடர்பான யோசனையை மத்திய வங்கியின் நிதி சபைக்கு முன் வைத்துள்ளார்.

மத்திய வங்கியின் அதிகாரிகள் நாட்டை விட்டு வெளியேறுவதைத் தடுப்பதற்காகச் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடும் நியாயப்படுத்தலை ஏற்றுக்கொள்ள முடியாது. பொருளாதார நெருக்கடியால் மத்திய வங்கியின் பணியாளர்கள் மட்டுமல்ல ஒட்டுமொத்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள் என்பதை மத்திய வங்கியின் ஆளுநர் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.அவ்வாறு பார்த்தால் ஒட்டுமொத்த மக்களுக்கும் சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும்.

மக்களின் வரிப்பணத்தில் சம்பளத்தை அதிகரித்துக் கொள்ளவில்லை தமது இலாபத்தில் தான் சம்பளம் அதிகரிக்கப்பட்டுள்ளது என்று மத்திய வங்கி குறிப்பிடுகிறது.மத்திய வங்கி ஏனைய வணிக வங்கிகளை போல் போட்டித்தன்மையுடன் செயற்படும் நிறுவனமல்ல, கூட்டிணைந்த நிறுவனம்.நாணயம் அச்சிடல் தொடர்பில் தீர்மானம் எடுக்கும் உரிமை மத்திய வங்கிக்கு உண்டு.ஆகவே தமது நிதியிலிருந்து தான் சம்பளம் அதிகரிக்கப்பட்டது என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

தமது வளர்ச்சிக்காக மக்கள் மீதே வரி சுமத்தப்படுகிறது. ஆகவே மத்திய வங்கியின் பணியாளர்களுக்கு அதிகரிக்கப்பட்டுள்ள சம்பள அதிகரிப்பு உடனடியாக இடைநிறுத்த வேண்டும்.நாட்டு மக்களிடம் ஒன்றைக் குறிப்பிட்டு பிறிதொன்றை செயற்படுத்துதற்கு மத்திய வங்கி மக்களிடம் மன்னிப்புக் கோர வேண்டும்-என்றார். (அ)

# சிப்பாயின் மரணம் குறித்து 4 இராணுவத்தினர் கைது!

கொழும்பு, பெப். 28

ஹொரண தொம்பகொட இராணுவ முகாமில் உள்ள குளத்தில் சிப்பாய் ஒருவர் மர்மமான முறையில் உயிரிழந்து காணப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணைகளுக்காக அதே முகாமில் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களாக கடமையாற்றும் நான்கு இராணுவத்தினர் கைது செய்யப்பட்டுள்ளதாக அங்குருவத்தோட்ட பொலிஸார் தெரிவித்தனர்.

இராணுவ வீரர் உயிரிழந்த தகவலை மறைத்தமை, நீதிவானின் விசாரணையில் அளிக்கப்பட்ட வாக்குமூலங்கள் முரணாக இருந்தமை மற்றும் உண்மையை பொலிஸாரிடம் தெரிவிக்காமல் இருந்ததன் அடிப்படையிலேயே நான்கு இராணுவத்தினரும் கைது செய்யப்பட்டனர்.

தொம்பகொட இராணுவ உபகரணப் படையின் விளையாட்டுப் பகுதி அதிகாரியாக கடமையாற்றிய தரிந்து லக்ஷான் என்ற 24 வயதுடைய அதிகாரி கடந்த ஜனவரி மாதம் 27ஆம் திகதி உயிரிழந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

# இவ்வருடத்தின் இரு மாதங்களில் 83 கொலைச் சம்பவங்கள் பதிவு!

கொழும்பு, பெப். 28

இவ்வருடத்தின் இரு மாத காலப்பகுதிக்குள் 83 கொலை சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

இலங்கையில் இவ்வருடம் இரு மாத காலப் பகுதிக்குள் 83 கொலை சம்பவங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் 1,180 திருட்டு சம்பவங்களும் 310 கொள்ளைச் சம்பவங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

மேலும் இரு மாத காலப்பகுதிக்குள் 20 துப்பாக்கி சூட்டுச் சம்பவங்கள் பதிவாகின.



அவற்றில் 10 துப்பாக்கி சூட்டு சம்பவங்களில் பாதாள உலக குற்றவாளிகள் ஈடுபட்டுள்ளதாக தெரிய வந்துள்ளது.

நாட்டில் இடம்பெற்று வரும் குற்றச் செயல்களை கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் தற்போது பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்-என்றார். (அ)

# வீட்டில் உறங்கிக்கொண்டிருந்தபோது தாக்குதலுக்கு இலக்கான நபர் மரணம்

கிளிநொச்சி, பெப். 28

வீட்டில் உறங்கி கொண்டிருந்தவர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் படுகாயமடைந்த நபர் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சி தர்மபுரம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான 44 வயதுடைய நடராசா ரவிக்குமார் என்பவரே உயிரிழந்துள்ளார்.

கடந்த 20ஆம் திகதி தனது வீட்டில் உறங்கிக்கொண்டிருந்த வேளை, அவரது முகம் மற்றும் தலைப் பகுதிகளில் கடுமையாக தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலில் படுகாயமடைந்தவரை கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதித்து, மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (அ)

# 3 சிறுவர் மூலம் ஒரு மணித்தியாலத்தில் 20 ஆயிரம் ரூபா சம்பாதித்த பெண் கைது!

கொழும்பு, பெப். 28

3 சிறுவர்களை வைத்து ஒரு மணித்தியாலத்துக்குள் 20 ஆயிரம் ரூபாவை சம்பாதித்த தாகக் கூறப்படும் பெண் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். கொழும்பு - ஹைட் பார்க் பிரதேசத்தில் இவ்வாறு கைது செய்யப்பட்ட பெண் யாசகம் எடுக்கும் ஒருவர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஒருவர் இந்த மூன்று சிறுவர்களிடம் நன்கொடையாக பணத்தை வழங்கியுள்ளார்.

குறித்த பெண் இந்தப் பணத்தை எடுத்து தன்வசம் வைத்ததை அவதானித்த நன்கொடை வழங்கியவர், இது தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்ததையடுத்து சந்தேக நபர் கொம்பனித்தெரு பொலிஸாரால் கைது செய்யப்பட்டதுடன் மூன்று சிறுவர்களும் பொலிஸ் பொறுப்பில் எடுக்கப்பட்டனர்.

சந்தேக நபரான பெண் கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# நாடு வங்குரோத்து அடைவதற்கு மகிந்த பெற்ற கடனே காரணம்!

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, பெப். 28

அதிகளவில் கடனை பெற்ற தன் காரணமாகவே நாடு வங்குரோத்து அடைந்தது எனவும் இலங்கை தற்போது 90 பில்லியன் டொலர் கடனாளி எனவும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவரின் அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மகிந்த ராஜபக்‌ஷவே அதிகளவில் கடனை பெற்றார். கடனை பெற்று கப்பல்கள் வராதா துறைமுகம், விமானங்கள் வராத விமான நிலையம், மாநாடுகள் நடக்காத மாநாட்டு மண்டபத்தை கடனை பெற்றார்.

இதனால், 75 ஆண்டு கால சாபத்தினால், நாடு வங்குரோத்து அடையவில்லை. மகிந்த பெற்ற கடன் காரணமாகவே நாட்டுக்கு இந்த நிலைமையேற்பட்டது.

நான்கு ஜனாதிபதிகளின் ஆட்சிக் காலங்களில் 9.8 பில்லியன் டொலர்களே கடனாக பெறப்பட்டது.

90 பில்லியன் டொலர் கடனில் ஜே.ஆர்.ஜெயவர்தனவின் ஆட்சிக்காலத்தில் 4 பில்லியன் டொலர்கள் பெறப்பட்டுள்ளது. ரணசிங்க பிரேமதாசவின் ஆட்சிக்காலத்தில் 1.7 பில்லியன் டொலர்கள் கடனாக பெறப்பட்டது.

டி.பி.விஜேதுங்கவின் பதவிக்காலத்தில் ஒரு பில்லியன் டொலர்களையே கடனாக பெறப்பட்டது.

சந்திரிகா குமாரதுங்கவின் ஆட்சிக்காலத்தில் 3.1 பில்லியன் டொலர்கள் கடனாக பெறப்பட்டது.

மொத்தமாக இவர்களின் ஆட்சிக்காலங்களில் பெற்ற கடனை கூட்டினால்,9.8 பில்லியன் டொலர்கள். எனினும் மகிந்த தனது ஆட்சிக்காலத்தில் 31 பில்லியன் டொலர்களை கடனாக பெற்றுள்ளார்.

அவர் பெற்ற இந்த கடன்கள் நாட்டுக்கு எந்த பயனும் கிடைக்காத துறைமுகம், விமான நிலையம்,மாநாட்டு மண்டபம், அதிவேக நெடுஞ்சாலைகளை நிர்மாணிக்க பயன்படுத்தப்பட்டது.

கடனை பெற்று திட்டங்களை மேற்கொண்டாலேயே அதிகளவில் கொள்ளையடிக்க முடியும்-என்றார். (அ)

# பொத்துவில் கனகர் கிராமத்தில் மக்கள் பெரும் ஆர்ப்பாட்டம்!

## காணி பத்திரம் வழங்குமாறு கோரி



**காரைதீவு, பெப். 28**

**பொத்துவில் மீள்குடியேற்ற கனகர் கிராமத்தில் பொது மக்கள் நேற்று முன் தினம் திங்கட்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**

கடந்த பல வருட காலமாக போராட்டத்தில் ஈடுபட்டு அண்மையில் 73 குடும்பங்களுக்கு காணிப் பத்திரம் வழங்கப்பட்டது. இப் பத்திரங்கள் ஏனையவர்களுக்கு இன்னும் வழங்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றது. இதனை காரணங்காட்டி அனைவருக்கும் காணி பத்திரம் வழங்கப்பட வேண்டும் என்று இன்று கனகர் கிராம மக்கள் பதாகைகளை ஏந்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பொத்துவில் பிரதேச செயலாளர் இது விடயத்தில் கவனம் எடுக்க வேண்டும். எமக்கும் காணி உறுதிப் பத்திரம் வழங்க வேண்டும். காலாகாலமாக இருந்து வந்த எமது பூர்வீக காணிகளை விரைவாக பூரணமாக ஒப்படைக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

33 வருடங்களாக காடு மண்டி மக்களுக்கு மறுக்கப்பட்டு வந்த பொத்துவில் கனகர் கிராம மக்களது காணிகள் பூரணமாக பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

பொத்துவில் பிரதேச சபை முன்னாள் உப தவிசாளரும் சமூக செயற்பாட்டாளருமான பெருமாள் பார்த்தீபன் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் த.சுபோதரன் உள்ளிட்ட பல பிரமுகர்களும் சமுகமளித்திருந்தனர்.

அங்கு உப தவிசாளரும் சமூக செயற்பாட்டாளருமான பெருமாள் பார்த்தீபன் கூறுகையில்-

இங்கு வாழ்ந்து வந்த மக்கள் 1985 க்கு பின்னர் யுத்தத்தில் இடம்பெயர்ந்தனர்.

வாழ்ந்த 226 பேரில் முதல் கட்டமாக 76 பேருக்கு காணியை விடுவிக்க அனுமதி வழங்கப்பட்டிருந்தது. அவர்களுள் 73 பேருக்கு முதற் கட்டம் வழங்கி வைக்கப்பட்டன. ஒருவருக்கு 1 ஏக்கர் 20 பேர்ச்சஸ் காணி வழங்கப்படும். பயிர்ச்செய்கைக்காக 1 ஏக்கர் காணியும் வீடு அமைக்க 20 பேர்ச்சஸ் காணியும் வழங்கப்பட்டது.

எம்மைப் பொறுத்தவரை அனைவருக்கும் இக் காணிகள் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்- என்றார்.

(அ)

# கொக்கட்டிச்சோலையில் சுற்றுலா நீதிமன்றம் அமைப்பதற்கு அமைச்சர் விஜயதாச அனுமதி



மட்டக்களப்பு, பெப். 28

மட்டக்களப்பு மாவட்டத்திற்கு இரண்டு நாள் விஜயத்தினை மேற்கொண்டுள்ள நீதி அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ மட்டக்களப்பு மாவட்டத்தின் நீதித்துறை சார்ந்த பல்வேறு கலந்துரையாடல்கள் மற்றும் கள விஜயங்களை மேற்கொண்டார்.

அந்த வகையில் மண்முனை தென்மேற்கு பிரதேசத்துக்குட்பட்ட கொக்கட்டிச்சோலையில் சுற்றுலா நீதிமன்றம் அமைப்பது தொடர்பாக கள விஜயம் மேற்கொண்டிருந்த நீதி அமைச்சர் யுத்த காலத்திற்கு முன்னர் கொக்கட்டிச்சோலை “கிராமக் கோடு” இயங்கி வந்த இடத்தில் புதிய சுற்றுலா நீதிமன்றம் அமைப்பதற்கான அனுமதியை வழங்கியதோடு அவற்றிற்கு முனைப்பான நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

குறித்த கள விஜயத்தின் போது கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும் மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன், நீதி இராஜாங்க அமைச்சர் அநுராதா ஜெயரத்தின, நீதியமைச்சின் செயலாளர் எம்.என்.ரணசிங்க, முன்னாள் மாகாண சபை உறுப்பினரும் தற்போதைய கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரின் பிரத்தியேக செயலாளருமான பூபாலபிள்ளை பிரசாந்தன் உள்ளிட்ட துறைசார் அதிகாரிகள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர். (அ)

# அம்பாறை பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பஸ் ஆற்றில் பாய்ந்தது



அம்பாறை, பெப். 28

அம்பாறையில் பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பஸ் பாதையை விட்டு விலகி ஆற்றில் விழுந்ததில் பல மாணவர்கள் காயமடைந்தனர்.

உயிர்ச்சேதம் எதுவும் இடம்பெறவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை பிரதேசத்தைச் சேர்ந்த 30 பாடசாலை மாணவர்களை ஏற்றிச் சென்ற பஸ்ஸே இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

அம்பாறை ரணவிரு மாவத்தைக்கு அருகாமையில் இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாகவும், காயமடைந்த மாணவர்கள் அம்பாறை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் அம்பாறை பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# தென்கிழக்கு பல்கலைக்கழக சர்வதேச ஆய்வரங்கு நுழைவுச்சீட்டு அறிமுகம்!

அம்பாறை, பெப். 28

எதிர்வரும் 29 ஆம் திகதி இடம்பெறவுள்ள 12 ஆவது சர்வதேச ஆய்வரங்கு மாநாட்டுக்கான நுழைவுச்சீட்டுக்களை அறிமுகம் செய்து வைக்கும் நிகழ்வும் தனியார் துறை நிறுவனங்களின் தலைவர்களுக்கு வழங்கி வைக்கும் நிகழ்வும் பல்கலைக்கழக நினைவுச் சின்னத்திற்கு முன்பாகவுள்ள திறந்த வெளியில் மாநாட்டின் இணைப்பாளர் பேராசிரியர் ஏ.எம்.எம். முஸ்தபா தலைமையில் இடம்பெற்றது.

உள்ளூர் தனியார்துறை நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் பல்கலைக்கழக பீடாதிபதிகள், நூலகர், பேராசிரியர்கள் திணைக்களங்களின் தலைவர்கள் விரிவுரையாளர்கள் பிரதிநிதியாளர் என பலரும் கலந்து கொண்டிருந்த நிகழ்வுக்கு உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

குறித்த மாநாட்டில் 200 ஆராய்ச்சி கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட உள்ளது குறிப்பிடத்தக்கது.(அ)

# கட்சி கிளைகள் புனரமைப்பு பணியை ஏப்ரலுக்குள் நிறைவு செய்யவேண்டும்

## மு.கா. தலைவர் ஹக்கீம் பணிப்பு

அம்பாறை, பெப். 27

அம்பாறை மாவட்டத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கிளைகள் புனரமைக்கும் வேலைத்திட்டத்தினை எதிர்வரும் ஏப்ரல் மாதத்துக்குள் நிறைவு செய்யுமாறு சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் அம்பாறை மாவட்ட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கிளைகள் புனரமைப்புக் குழுவைப் பணித்துள்ளார்.

அம்பாறை மாவட்டத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிளைகள் புனரமைப்பு வேலைத்திட்டம் தொடர்பான விசேட கூட்டம் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தேசிய தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதி செயலாளர் மன்சூர் ஏ. காதர், பிரதி தேசிய அமைப்பாளரும், முன்னாள் கிழக்கு மாகாண அமைச்சருமான எம்.எஸ்.உதுமாலெப்பை, அம்பாறை மாவட்ட குழுவின் செயலாளரும், முன்னாள் கல்முனை மாநகர சபை உறுப்பினருமான ஏ.சீ.சமால்டீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அம்பாறை மாவட்டத்தில் அமைந்துள்ள 226 கிராம சேவகர் பிரிவுகளில் ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவுகளும்



கட்சி கிளை, இளைஞர் கிளை, மகளிர் கிளை புனரமைக்கும் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

சம்மாந்துறை தொகுதியில் 216 கட்சி கிளைகளும், பொத்துவில் தொகுதியில் 321 கட்சி கிளைகளும், கல்முனை தொகுதியில் 141 கட்சி கிளைகளும் என மொத்தமாக 678 கிளைகள் புனரமைக்கப்படவுள்ளன எனவும், இதில் சம்மாந்துறை தொகுதியில் 37 கட்சி கிளைகளும், பொத்துவில் தொகுதியில் 52 கட்சி கிளைகளும், கல்முனை தொகுதியில் 35 கட்சி கிளைகளும் என மொத்தமாக 124 கிளைகள் மாத்திரம் இதுவரை புனரமைக்கப்பட்டுள்ளன.

மிகுதியாகப் புனரமைக்கப்படவுள்ள 554 கிளைகள் புனரமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பிரதி தேசிய அமைப்பாளர் எம்.எஸ் உதுமாலெப்பை தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் இதுவரை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி கிளைகள் புனரமைப்பு வேலைத்திட்டம் நிறைவுபெற்ற கிராமங்களில் விரைவில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமினால் மத்திய குழுக்கள் அமைப்பதற்கான வேலைத்திட்டம் ஆரம்பிப்பது எனத் தீர்மானிக்கப்பட்டது.

(அ)

# போர் நிறுத்தத்திற்கு இஸ்ரேல் இணங்கும்

## அமெரிக்கா தெரிவிப்பு



நியூயோர்க், பெப். 28

**முஸ்லிம்களின் புனித ரமழான் மாதத்தை முன்னிட்டு போர் நிறுத்தத்திற்கு இஸ்ரேல் இணங்கியுள்ளதாக அமெரிக்கா அறிவித்துள்ளது.**

பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

மேலும் போர் நிறுத்தம் மற்றும் கைதிகள் பரிமாற்றம் தொடர்பான விடயத்தை ஹமாஸ் அமைப்பு ஆய்வு செய்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை காசாவில் பாதிப்புக்குள்ளாகியுள்ள வைத்தியசாலைகள் மற்றும் வெதுப்பகங்களை புனரமைப்பு செய்வதற்காக 500 உதவி வாகனங்கள் அனுமதிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம், ஹமாஸ் மற்றும் இஸ்ரேலிய படைகளுக்கிடையில் மோதல் வெடித்திருந்தது.

இந்த நிலையில் எதிர்வரும் மார்ச் மாதம் 10 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ரமழான் மாதத்தை முன்னிட்டு இந்த போர் நிறுத்த முன்னெடுக்கப்படவுள்ளதாக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் சர்வதேச ஊடகம் ஒன்றிற்குத் தெரிவித்துள்ளார்.

மேலும் இஸ்ரேலின் மூர்க்கத்தனமான தாக்குதலால் பலஸ்தீன மக்கள் பாரியளவில் படுகொலை செய்யப்படுகின்றனர்.

இதன் காரணமாக இஸ்ரேல் சர்வதேசத்தின் ஒத்துழைப்பை இழக்க நேரிடும் எனவும் பைடன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை மோதல் காரணமாக இரு தரப்பிலும் உள்ள அப்பாவி மக்கள் கொல்லப்படுவதாகவும், இதனைத் தவிர்ப்பதற்கு இருதரப்பும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு சமாதான உடன்படிக்கையினை ஏற்படுத்த வேண்டும் எனவும் பைடன் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

# பாகிஸ்தானின் முதல் பெண் முதல்வரானார் மரியம் நவாஸ்



இஸ்லாமாபாத், பெப். 28

பாகிஸ்தான் முஸ்லிம் லீக் - நவாஸ் கட்சியின் மூத்த தலைவருமான மரியம் நவாஸ் நேற்று முன்தினம் பஞ்சாப் மாகாண முதல்வராகப் பதிவியேற்றுள்ளார்.

இதன் மூலம், பாகிஸ்தானின் முதல் பெண் முதல்வர் என்ற பெருமை மரியம் நவாஸுக்கு கிட்டியுள்ளது.

பாகிஸ்தானில் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியான பஞ்சாப் மாகாணத்தில் சமீபத்தில் நடைபெற்ற தேர்தலில், மொத்தமுள்ள 327 தொகுதிகளில், மரியம் நவாஸ் தரப்பு பிஎம்எல் -என் கட்சி 137 தொகுதிகளில் வெற்றி பெற்றது.


முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் பி.டி.ஐ கட்சி சார்பில் சுயேச்சைகளாகப் போட்டியிட்ட வேட்பாளர்கள் மொத்தம் 113 தொகுதிகளில் வெற்றி பெற்றனர்.

இதனைத் தொடர்ந்து 50 வயதான மரியம் நவாஸ், கூட்டணிக் கட்சிகளான பாகிஸ்தான் மக்கள் கட்சி(பி.பி.பி), பாகிஸ்தான் முஸ்லிம் லீக் -கியூ(பி.எம்.எல்-கியூ) மற்றும் இஸ்டேகாம் -ஐ-பாகிஸ்தான் கட்சி(ஐபிபி) ஆகிய கட்சிகளின் ஆதரவுடன், தனது தந்தையும், பாகிஸ்தான் முன்னாள் பிரதமருமான நவாஸ் ஷெரீப் மற்றும் பாகிஸ்தானின் புதிய பிரதமராகப் பொறுப்பேற்கவுள்ள தனது சித்தப்பா ஷாபாஸ் ஷெரீப் ஆகியோரது முன்னிலையில், ஆளுநர் மாளிகையில் நடைபெற்ற பதவியேற்பு நிகழ்ச்சியில் பஞ்சாப் முதல்வராகப் பதவியேற்றார்.

அதனை தொடர்ந்து உரையாற்றிய மரியம் நவாஸ், தனது தந்தை அலங்கரித்த பதவியில் தான் பொறுப்பேற்றிருப்பது மகிழ்ச்சி அளிப்பதாக தெரிவித்தார்.

பஞ்சாப் மாகாணத்தின் ஒவ்வொரு பெண்ணும், பெண் முதல்வரைப் பார்த்து பெருமிதம் கொள்வதாகவும், இதே போல, பெண்கள் தலைமைப் பதவியேற்கும் சூழல் எதிர்காலத்திலும் தொடரும் என்ற நம்பிக்கை வந்துள்ளதாகவும் தெரிவித்துள்ள அவர், எதிர்க் கட்சிகளை பழிவாங்கும் நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டேன் என்றும் அவர் உறுதியளித்தார்.

# நைல் நதியில் படகு மூழ்கி 10 பேர் பலி!




கெய்ரோ, பெப். 28

எகிப்து தலைநகர் கெய்ரோவின் புறநகர் பகுதியில் உள்ள நைல் நதியில் நேற்று படகு ஒன்று மூழ்கியதில் 10 பேர் உயிரிழந்துள்ளனர்.

கிரேட்டர் கெய்ரோவின் ஒரு பிரதேசமான கிசாவில் உள்ள மான்ஷாட் எல் கான்டர் நகரில் இந்த விபத்து நடந்துள்ளது.

இந்த படகில் பயணம் செய்யும் அனைவரும் உயிரிழந்துள்ளனர். உயிரிழந்தவர்கள் கட்டட நிர்மாண தளத்தில் வேலை செய்து வந்த தொழிலாளர்கள்.

உயிர் தப்பிய 5 பேர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, சிகிச்சைகளின் பின்னர் வெளியேறியுள்ளனர்.

படகு விபத்துக்கான காரணம் தெரியவில்லை.

இறந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 2 லட்சம் எகிப்திய பவுண்டுகளும், காயமடைந்த 5 பேருக்கு தலா 20 ஆயிரம் பவுண்டுகளும் இழப்பீடாக வழங்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

எகிப்தின் நைல் மேல் டெல்டா பகுதியில் வசிக்கும் மக்கள் பெரும்பாலும் தமது அன்றாட தேவைகளுக்காக படகுகளில் பயணம் செய்து வருகின்றனர்.

படகுகள் சரியான முறையில் பராமரிக்கப்படுவதில்லை என்பதால், நைல் நதியில் அடிக்கடி இப்படியான விபத்துக்கள் ஏற்பட்டு வருகின்றன.

ஏற்கனவே நடந்த விபத்துக்களில் பலர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (அ)

# டெங்கு பரவலால் பெருவில் அவசர நிலை பிரகடனம்!

லிமா, பெப். 28

பெருவில் டெங்கு தொற்றுக்கள் அதிகரித்து வருவதால் அதன் பெரும்பாலான மாகாணங்களில் சுகாதார அவசரநிலையை அறிவித்தது.

நாட்டின் சுகாதார அமைச்சின் கூற்றுப்படி, இந்த ஆண்டின் முதல் ஏழு வாரங்களில் பதிவுசெய்யப்பட்ட டெங்கு தொற்றுக்களின் எண்ணிக்கை 2023 ஆம் ஆண்டின் இதே காலப்பகுதியை விட இரண்டு மடங்கு அதிகமாகும் - 31,000 க்கும் அதிகமான தொற்றுக்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

"இது ஒரு பெரிய பிரச்னை" என்று சுகாதார அமைச்சர் சீசர் வாஸ்குவெஸ் கடந்த வாரம் அவசரநிலை அறிவிக்கப்படுவதற்கு முன்பு கூறினார்.

"அது கையை விட்டு போகிறது."

சுகாதார அவசரநிலை, பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு விரைவாக நிதியை மாற்றவும், மருந்துவர்கள் மற்றும் தாதியர்களை கொண்டு செல்லவும் நாட்டின் அரசாங்கத்திற்கு உதவும். தலைநகர் லிமாவைச் சுற்றியுள்ள பகுதிகள் உட்பட நாட்டின் 24 மாகாணங்களில் 20 மாகாணங்களில் அவசர நிலை பிரகடனப் படுத்தப் பட்டுள்ளது.



கடந்த ஆண்டு ஒரு டெங்கு தொற்றுநோய் பெருவின் பொது சுகாதார அமைப்பை சிரமத்திற்கு உள்ளாக்கியது, ஆயிரக்கணக்கானோர் அவசர அறைகளில் கவனிப்பை நாடினர்.


இந்த நோய் ஏடிஸ் எகிப்தி என்ற நுளம்பால் பரவுகிறது, இது வெப்பமான மற்றும் ஈரப்பதமான நிலையில் இனப்பெருக்கம் செய்கிறது.

பெரும்பாலான டெங்கு நோயாளிகள் லேசான அறிகுறிகளைக் கொண்டிருந்தாலும், இந்நோய் கடுமையான தலைவலி, காய்ச்சல் மற்றும் தசை வலி போன்றவற்றை ஏற்படுத்தும்.

கடந்த ஆண்டு, பெருவில் டெங்கு தொற்றுநோயால் 18 பேர் இறந்தனர், இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் 32 பேர் வைரஸால் இறந்துள்ளனர்.

டிசம்பரில், உலக சுகாதார அமைப்பு பெருவின் 2023 டெங்கு தொற்றுநோய் மழை மற்றும் வெப்பமான வெப்பநிலையுடன் தொடர்புடையது என்று குறிப்பிட்டது. (அ)

# ஊடகத்துறையானது அரசியலை போன்றது



மெக்சிக்கோசிற்றி, பெப். 28

ஊடகவிலாளர்களின் தனிப்பட்ட தொலைபேசி எண்களை பகிரங்கப்படுத்தும் திட்டத்திற்கு மெக்சிகோ ஜனாதிபதி அன்ரீஸ் இம்மனுவல் ஆதரவு வழங்கியுள்ளார்.

ஜனாதிபதி வெளியிட்டுள்ள கடிதம் ஒன்றில் இதனை அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஊடகத்துறையானது பொதுத்துறை எனவும், அது அரசியலைப் போன்றது எனவும் மெக்சிகோ ஜனாதிபதி அன்ரீஸ் இமனுவல் குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே சகலரும் வெளிப்படைத்தன்மையுடன் செயற்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டியுள்ளார். இதேவேளை உலக நாடுகளில் ஊடகவிலாளர்களுக்கு அச்சுறுத்தல் நிறைந்த நாடாக மெக்சிகோ காணப்படும் நிலையில் ஊடகவியலாளர்களின் கைத்தொலைபேசி எண்ணை பகிரங்கப்படுத்துவது மேலும் ஆபத்தானது என விமர்சிக்கப்படுகின்றது. (அ)

# சனல் 4 சுமத்திய குற்றச்சாட்டுகள் விசாரணைகளுக்கு என்ன ஆனது?

## இரான் விக்கிரமரத்ன கேள்வி

கொழும்பு, பெப். 218

**ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பில் சனல் 4 சுமத்திய குற்றச்சாட்டுக்களை விசாரிக்க நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவின் முன்னேற்றம் குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் கோரியுள்ளார்.**



ஜனாதிபதி ஆணைக்குழுவின் அறிக்கை எப்போது பாராளுமன்றுக்கும் மக்களுக்கும் கிடைக்கும் என்பதை சபைக்கு தெரிவிக்குமாறும் பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும் சனல் 4 சுமத்திய அதே குற்றச்சாட்டுகள் தொடர்பில் விசாரணை செய்வதற்கு பாராளுமன்ற தெரிவுக்குழுவை நியமித்தமைக்கான காரணத்தை விளக்குமாறும் அவர் கேட்டுக் கொண்டார்.

இதன் பின்னர் பாராளுமன்றத் தெரிவுக்குழுவால் ஏற்பட்ட முன்னேற்றம் அல்லது முன்னேற்றம் ஏற்படவில்லை என்றால், அதற்கான காரணங்கள் மற்றும் தெரிவுக்குழுவின் வரம்பு குறித்து விளக்குமாறும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஈஸ்டர் தாக்குதல்கள் தொடர்பில் சர்வதேச விசாரணைக்கான கோரிக்கையை அரசாங்கம் தொடர்ச்சியாக புறக்கணிக்க காரணம் என்ன என்பதை விளக்குமாறும் எரான் விக்கிரமரத்ன பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் கேட்டுக்கொண்டார். (அ)

# கோட்டாபய ராஜபக்ஷ சார்பில் முன்னிலையாகப்போவதில்லை!

## சட்டமா அதிபர் அறிவிப்பு

கொழும்பு, பெப். 28

“முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச சார்பில் முன்னிலையாகப் போவதில்லை” என சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரத்தினம் உயர்நீதிமன்றில் அறிவித்துள்ளார்.

கடந்த 2022 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் திகதி போராட்டம் இடம்பெற்ற போது, ஊரடங்குச் சட்டம் மற்றும் சமூக ஊடகங்களுக்கு தடை விதித்து வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலின் ஊடாக அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக தீர்ப்பு வழங்குமாறு கோரி மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன.

இந்த மனுக்கள் பிரிதி பத்மன் சூரசேன, காமினி அமரசேகர மற்றும் ஷிரான் குணரத்ன ஆகிய மூவரடங்கிய உச்ச நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது போதே இவ்வாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் வெளியிடப்பட்ட அவசரகாலச் சட்டத்தின் மூலம் அடிப்படை மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக மாற்றுக் கொள்கை மையம் உள்ளிட்டவற்றால் தாக்கல் செய்யப்பட்ட 06 மனுக்கள் தொடர்பில் தீர்ப்பளிக்கப்பட்ட போது, சட்டமா அதிபர் சார்பில் முன்னிலையான சிரேஷ்ட அரச சட்டவாதி ஷமிந்த விக்கிரம இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# பல்கலை கல்விசாரா ஊழியர்கள் இன்று முதல் பணிப்புறக்கணிப்பு!

கொழும்பு, பெப். 28

சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட பல கோரிக்கைகளை முன்வைத்து பல்கலைக்கழக கல்விசாரா ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட தீர்மானித்துள்ளனர்.

அதன்படி, இன்று மற்றும் நாளை பணிப்புறக்கணிப்புப் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் கூட்டுக் குழுவின் இணைத் தலைவர் தம்மிக்க பிரியந்த தெரிவித்தார்.

ஒரு வாரத்துக்குள் தமது பிரச்னைக்கான தீர்வை வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காவிட்டால் எதிர்காலத்தில் பாரிய தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக தம்மிக்க பிரியந்த குறிப்பிட்டார். (அ)

# 2000 கிராம உத்தியோகத்தர்களை சேவையில் இணைக்க நடவடிக்கை!

கொழும்பு, பெப். 28

புதிதாக 2000 கிராம உத்தியோகத்தர்களை சேவையில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஆரம்பகட்ட நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருவதாக அரச நிர்வாக அமைச்சின் செயலாளர் ப்ரதீப் யசரத்ன தெரிவித்துள்ளார்.

கிராம உத்தியோகத்தர்களுக்கான பரீட்சை பெறுபேறுகள், பரீட்சைகள் திணைக்களத்தினால் அரச நிர்வாக அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளன.

தகுதி பெற்ற சுமார் 4000 பேரை நேர்முகப் பரீட்சைக்காக அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நீண்ட காலமாக கிராம உத்தியோகத்தர்கள் சேவையில் இணைத்துக்கொள்ளப்படாமையினால் வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளன.

பணிபுரிந்த சிலர் ஓய்வு பெற்றுள்ளமையினாலும் பதவி வெற்றிடங்கள் ஏற்பட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார். (அ)

# வாக்குவாதம் முற்றியதில் இளைஞர் அடித்து கொலை!

கொழும்பு, பெப். 28

பழைய தகராறு ஒன்றை அடிப்படையாக கொண்டு ஏற்பட்ட வாக்குவாதம் முற்றியதில் இளைஞன் ஒருவர் சிலரால் அடித்து கொல்லப்பட்டுள்ளார்.

ஹபராதுவ கஹவெனகம அம்பிட்டிய பிரதேசத்தில் நேற்று முன் தினம் இச்சம்பவம் பதிவாகியுள்ளது.

குறித்த தரப்பினர் இளைஞனை தடி உள்ளிட்ட பொருட்களால் தாக்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மிஹிரிபன்ன, தல்பே பகுதியைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞனே தாக்குதலில் உயிரிழந்துள்ளார்.

கொலையுடன் தொடர்புடைய ஆறு சந்தேக நபர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் அவர்களில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் தல்பே, கஹவென்னகம பிரதேசத்தை சேர்ந்த 21 வயதுடையவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஹபராதுவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# ஆடு பயிர்களை அழித்தமையால் சிறுவனை கடுமையாக தாக்கிய தோட்ட உரிமையாளர்!

கிளிநொச்சி, பெப். 28

கிளிநொச்சி திருவையாறு பகுதியில் தோட்டத்துக்குள் ஆடு சென்று பயிர்களை அழித்ததாக தெரிவித்து தோட்டத்தின் உரிமையாளரால் அயல் வீட்டில் வசிக்கும் 14 வயது சிறுவனை தோட்டத்துக்குள் அழைத்துச் சென்று கடுமையாக தாக்கப்பட்டு உள்ளார்.

கிளிநொச்சி திருவையாறு மூன்றாம் பகுதியில் உள்ள தனியார் ஒருவரின் தோட்டத்துக்குள் அயல் வீட்டு ஆடு சென்று பயிர் அழிவை ஏற்படுத்தியதாக தோட்டத்து உரிமையாளர் ஆட்டின் உரிமையாளர் வீட்டுக்குச் சென்று அங்கிருந்த 14 வயது சிறுவனை அழைத்துச் சென்று தனது தோட்டத்துக்குள் வைத்து கடுமையாக தாக்கியுள்ளார்.

இவ்வாறு தாக்கப்பட்டு பாதிக்கப்பட்ட சிறுவன் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றையும் பதிவு செய்துள்ளனர். (அ)

# வெப்பமான காலநிலை மார்ச் நடுப்பகுதி வரையும் நீடிக்கும்

கொழும்பு, பெப். 28

கொழும்பு, களுத்துறை, கம்பஹா, காலி, மாத்தறை உள்ளிட்ட நாட்டின் பல மாவட்டங்களில் நிலவும் கடும் வெப்பமான காலநிலை அடுத்த மாத நடுப்பகுதி வரை நீடிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந் நிலைமையினால் சில பகுதிகளில் உள்ள நீரோடைகள் மற்றும் கிணறுகளின் நீர்மட்டம் வீழ்ச்சியடைந்து மக்கள் கடும் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், குருநாகலில் நேற்று முன் தினம் அதிகூடிய வெப்ப நிலையாக 35.5 பாகை செல்சியஸ் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்தின் 160 தொழில்நுட்ப வல்லுநர்கள் பணி விலகல்

கொழும்பு, பெப். 28

சிறிலங்கன் எயார்லைன்ஸில் சேவையாற்றிய 160 விமான தொழில்நுட்ப வல்லுநர்கள் கடந்த இரண்டு ஆண்டுகளில் தங்கள் தொழிலை விட்டு வெளியேறியுள்ளனர்.

இதன் காரணமாக தற்போது 250 விமான தொழில்நுட்ப வல்லுநர்கள் மட்டுமே அங்கு பணிபுரிவதாக அதன் விமான தொழில்நுட்ப வல்லுநர்கள் தெரிவிக்கின்றனர்.

சிறிலங்கன் எயார்லைன்ஸின் கூற்றுப்படி, 415 விமான தொழில்நுட்ப வல்லுநர்கள் சேவைக்கு தேவை என தெரிவித்துள்ளனர்.

விமான தொழில்நுட்ப வல்லுநர்களுக்கு வெளிநாடுகளின் முக்கிய விமான நிறுவனங்களில் அதிக தேவை இருப்பதாகவும் அதன் தொழில்நுட்ப வல்லுநர்கள் குறிப்பிடுகின்றனர். (அ)

# 7 விமான சேவைகள் தாமதம் மூன்று விமானங்கள் இரத்து!

கொழும்பு, பெப். 28

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து பல்வேறு சர்வதேச நாடுகளுக்கும் பயணிக்கவிருந்த சிறிலங்கன் எயார்லைன்ஸுக்கு சொந்தமான 3 விமானங்களின் பயணங்கள் இரத்து செய்யப்பட்டுள்ளன.

நேற்று பயணத்தை மேற்கொள்ளவிருந்த 3 விமானங்களின் பயணங்களை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டதாக சிறிலங்கன் விமான சேவை நிறுவனத்தின் தலைவர் அஷோக பத்திரகே தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் குறித்த விமானங்களில் பயணிக்கவிருந்த பயணிகளுக்கு அறிவிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

இதனிடையே, நேற்று பயணிக்கவிருந்த 7 விமான சேவைகள் தாமதமடைந்துள்ளதாக சிறிலங்கன் விமான சேவை நிறுவனம் தெரிவித்துள்ளது.

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக குறித்த விமான சேவைகள் தாமதமடைந்துள்ளதாக நிறுவனத்தின் ஊடகப் பேச்சாளர் தீபால் பெரேரா கூறினார்.

யு.எல் 364, யு.எல் 161, யு.எல் 314, யு.எல் 121, யு.எல் 189, யு.எல் 880 மற்றும் யு.எல் 470 ஆகிய இலக்கங்களைக் கொண்ட விமானங்களின் பயணங்களே இவ்வாறு தாமதமடைந்துள்ளதாக சிறிலங்கன் விமான சேவை நிறுவனத்தின் ஊடகப் பேச்சாளர் தெரிவித்துள்ளார். (அ)

## யாழ்...

அவகாசங்கள் வழங்கப்பட்டும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவும் அரசாங்கமும் இதுவரை தீர்வு வழங்காதமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் - உடனடித் தீர்வு வேண்டியும் இந்தப் போராட்டங்கள் முன்னெடுக்கப் படவுள்ளன.

இதன்படி, நாடு முழுவதும் உள்ள பல்கலைக்கழகங்களில் பணிப்புறக் கணிப்பு நடைபெறும். இதேசமயம், நாளை வியாழக்கிழமை பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் முன்னால் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இதனிடையே, யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் இன்றும் நாளையும் வேலைநிறுத்தப் போராட்டம் நடைபெறும். அத்துடன், இன்று முற்பகல் 11 மணிக்கு யாழ். பல்கலைக்கழக முன்னறில் கவனவீர்ப்பு போராட்டம் நடைபெறும் என்று யாழ்ப்பாண பல்கலைக்கழக ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.

## எம்.பி...

விமல் வீரவன்ச தலைமையில் பாராளுமன்றத்தில் சுயேட்சையாக செயற்படும் குழுவில் தற்போது, உத்திக பிரேமரத்ன செயற்பட்டு வருகின்றார். இவரை இலக்கு வைத்து கடந்த செப்ரெம்பர் மாதம் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## இன்று...

உரிமையாளர்களும் ஏனைய மாவட்ட சங்கப் பிரதிநிதிகளும் இன்று (நேற்று) 8 மணிக்கு மின்சார நிலைய வீதித் தரிப்பிடத்துக்கு சென்றோம்.

அங்கு, அமைச்சர் எமது தரிப்பிடம் யாழ். போதனா மருத்துவமனையின் சேவைகளுக்கு இடையூறாக இருப்பதாகவும் அதனால் சேவையில் ஈடுபடுவதற்காக நிற்கும் பேருந்துகளை அந்த இடத்தில் தரித்து நிற்க வேண்டாம் என பொலிஸாரின் முன்னிலையில் கூறி அவ்விடத்திற்கு “வாகனங்களை நிறுத்த வேண்டாம்” (No Parking) என்ற அறிவிப்பு பலகையும் வைக்கப்பட்டது.

ஏற்கனவே இலங்கை போக்குவரத்துச் சபையின் ஒத்துழைப்பின்மையால், குறுகிய அதாவது ஒரே நேரத்தில் 4 பேருந்துகளை மட்டும் தரித்து நிற்கக் கூடிய மின்சார நிலைய வீதித் தரிப்பிடத்திலேயே சேவையில் ஈடுபடுகிறோம். தற்போது அமைச்சரின் அறிவுறுத்தலால் 2 பேருந்துகள் மட்டும் தரித்து நிற்கக் கூடிய தரிப்பிடத்திலிருந்து சேவையாற்றுகிறோம்.

இதனால் அந்த இடத்தில் இருந்து தூர இடங்களுக்கான சேவைகளை ஆற்ற முடியாதுள்ளது. வெளி மாவட்டங்களில் இருந்து யாழ்ப்பாணம் வரும் பேருந்துகள் தரித்து நிற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இக்கட்டான இந்நிலையிலும் வட மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகார சபை எம்மிடம் இருந்து பணத்தை அறவிடுவதில் மட்டும் விழிப்பாக இருக்கின்றது. நாம் மின்சார நிலைய வீதியில் குறுகிய தரிப்பிடத்தில் இருந்து மிகக் கஷ்டமான சூழ்நிலையில் சேவையில் ஈடுபடுவது தெரிந்தும் எமக்கான தரிப்பிட வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் முயற்சிகள் எதனையும் மேற்கொள்ளாது அசமந்த போக்கில் இருக்கின்றது.

இந் நிலையில் ஐந்து மாவட்ட சங்கங்களின் பிரதிநிதிகள் ஒன்றிணைந்து மீண்டும் அமைச்சருடன் கலந்துரையாடி, எமது தரிப்பு நிலையத்தில் இருந்து சேவைகளை ஆற்ற முடியாத நிலையைத் தெரிவிக்கும் முயற்சிகள் பலனளிக்காததால் தூர இடங்களுக்கான தனியார் போக்குவரத்துச் சேவைகளும், இலங்கை போக்குவரத்து சபையின் தூரசேவைகளும் புதிய தரிப்பிடத்தில் இணைந்து சேவைகளில் ஈடுபடும் சூழ்நிலை உருவாகும் வரை வட மாகாணத்துக்கான அனைத்து தனியார் போக்குவரத்து சேவைகளும் நடைபெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது - என்றார். (ஐ)

## தென்னக்கோன்...

கிடைக்கவில்லை என்று நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டமையைத் தொடர்ந்தே இந்த வழக்குகள் ஒத்திவைக்கப்பட்டன.

## யாழ்.-இந்திய..

முன்தினம் திங்கட்கிழமை அவரின் கடமை நிறைவுக்கு வந்தது. இந்த நிலையில், அன்றைய தினமே சாய் முரளி தனது பதவியை பொறுப்பேற்றார்.

செவிதி சாய் முரளி முன்னர் ரஷ்யாவின் விளாடிவோஸ்டோக்கில் துணைத் தூதராகப் பணியாற்றினார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சிறிய...

அமைச்சர் கூறினார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், “நாடு ஒரு நிதிக் கொள்கையைக் கொண்டிருக்க வேண்டும். மேலும் பொருளாதாரமும் வலுவாக இருக்க வேண்டும். இந்த விடயத்தில் இலங்கை மத்திய வங்கிக்கு கணிசமான அதிகாரம் உள்ளது. கடந்த காலத்தில் நாட்டில் கருத்தாடலுக்கு உட்பட்ட பரேட்டா சட்டம் பற்றி குறிப்பிடுவதென்றால், இவ்விடயத்தில் மத்திய வங்கி, நிதி நிறுவனங்களின் ஸ்திரத்தன்மையை பாதுகாப்பதில் மாத்திரமே கவனம் செலுத்தியது.

நாட்டின் கையிருப்பு நிலை குறித்து மத்திய வங்கி கவனம் செலுத்தியதா என்று பல தரப்பினரும் கேள்வி எழுப்பினர். மேலும், விவசாயத் துறை 22% - 8% வரையிலும், தொழில் துறை 38% - 32% வரையிலும் வீழ்ச்சியடைந்துள்ளமை குறித்தும் கவனம் செலுத்த வேண்டும்.

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 17 முறை கடன் பெற வேண்டியிருந்தது. அவ்வாறு செய்தாலும் பொருளாதாரத்தை மீட்க முடியவில்லை. நாம் பொருளாதாரத்தில், சேவைத் துறையை தொடர்ந்து விரிவுபடுத்தியுள்ளோம். தொழில் துறை மீது காட்டப்பட்ட அலட்சியத்தால், உற்பத்தித் திறன் குறைந்துள்ளது. இரண்டு அரச வங்கிகளால் வழங்கப்பட்ட கடன் தொகை சுமார் 60 ஆயிரத்து 200 கோடி ரூபாயாகும். இதில் பெரும்பகுதியை திருப்பிச் செலுத்த முடியாததால் அறிவிடமுடியா கடனாக தள்ளுபடி செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளது.

இந்தக் கடன் தொகையை நம் நாட்டில் விவசாயம் மற்றும் தொழில் துறைகளில் பயன்படுத்த முடிந்திருந்தால், அந்தத் துறைகளில் பெரும் வளர்ச்சியை எட்ட முடிந்திருக்கும். நாட்டில் நிதிக் கட்டுப்பாடு இல்லாததால்தான் இத்தகைய நிலை ஏற்பட்டது.

இங்கு வர்த்தகர்களும், நிதி நிறுவனங்களும் நெருக்கடியில் சிக்காத வகையில் செயல்பட வேண்டும். அதன்படி, பரேட்டா சட்டத்தால் ஏற்படும் நெருக்கடிகளைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்காக, பாராளுமன்றத்தில் சில திருத்தங்களை முன்வைக்க எதிர்பார்க்கிறோம்.

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு தனியான கடன் திட்டத்தையும் அறிமுகப்படுத்தவுள்ளோம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இதே கருத்தையே கொண்டுள்ளார்.

மேலும், எமக்கு நிதியுதவி வழங்கும் உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்ற நிறுவனங்களுடன் கலந்தாலோசித்து இந்த குறைந்த வட்டியில் கடன் வழங்கும் முறையை அறிமுகப்படுத்த எதிர்பார்க்கிறோம்.

வங்கிகள் மூலம் மாத்திரம் கடன் வழங்கும்போது, கடன் பெறத் தகுதியுள்ளவர்களுக்கு கடன் வழங்கப்படுகிறதா என்ற பிரச்னை எழுகிறது. எனவே, அமைச்சரவையுடன் கலந்துரையாடிய பின்னர், இந்த கடன் வசதியை வழங்கும் போது, கண்காணிப்பு முறைமையின் கீழ் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டுள்ளது - என்றார்.

# நம்பிக்கையில்லா பிரேரணை தோற்கடிக்கப்படும்

கொழும்பு, பெப். 28



எதிர்க்கட்சிகள் தங்களின் இயலாமையை மறைப்பதற்கே சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவர நடவடிக்கை எடுத்திருக் கின்றன. இவர்களின் இந்த நம்பிக்கையில்லா பிரேரணை இதற்கு முன்னர் கொண்டுவந்த பிரேரணைகள் போன்று புஷ்வாணமாகிவிடும் என ஐக்கிய தேசிய கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஆஷூ மாரசிங்க தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் நிகழ்நிலை காப்புச்சட்டத்தை அனுமதித்து சபாநாயகர் கைச்சாத்திட்டமைக்கு எதிராகவே தற்போது எதிர்க்கட்சிகள் சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை ஒன்றை கொண்டுவர நடவடிக்கை எடுத்திருக்கிறது. குறித்த சட்டம் பாராளுமன் றத்தில் நிறைவேற்றப்படும்போது சட்டமூலத்துக்கு உயர் நீதிமன்றம் வழங்கிய திருத்தங்கள் உள்வாங்கப்படவில்லை என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரனே சபையில் எதிர்ப்பு தெரிவித்து வந்தார்.

ஆனால், பின்னர் சுமந்திரன் எம்.பி. பாராளுமன்ற அறைக்கு சென்று அங்கு சட்டமா அதி பர், உள்ளிட்டவர்களுடன் இது தொடர்பாக கலந்துரையாடியபோது, அவர் இணங்கினார்.

அதனால் நிகழ்நிலை காப்புச்சட்டத்தை அனுமதிக்க சபாநாயகர் நன்கு ஆராய்ந்தே கைச்சாத்திட்டுள்ளார் அதில் எந்த சந்தேகமும் இல்லை. என்றாலும் எதிர்கட்சிகள் தங்களின் அரசியல் நோக்கிலேயே தற்போது சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவர நடவடிக்கை எடுத்திருக்கிறது. - என்றார். (ஐ)

## அமைச்சு...

செயலகத்தில் இடம் பெற்ற நிகழ்வு ஒன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நான் நீண்ட காலமாக எதை கூறி வந்தேனோ அதைத்தான் வரலாறும் இன்றைக்கு ஏற்றுக் கொண்டிருக்கின்றது.

அன்றைக்கு நான் சொன்னதை சக கட்சிகள், சக இயக்கங்கள் ஏற்றுக் கொண்டிருந்தால் இன்றைக்கு இந்த அழிவுகள், இழப்புக்கள், துன்பங்கள் வந்திருக்காது என இலங்கைக்கான இந்திய தூதுவருடனான கலந்துரையாடலில் கூறியிருந்தேன்.

அதைவிட மிக முக்கியமாக சமீபத்தில் ஜே.வி.பியின் தலைவர் புது டிலிக்கு சென்று இருந்தார். ஆனால் அவர் அங்கு எமது கடற்தொழிலாளர்களின் பிரச்னை குறித்து எந்த ஒரு கருத்தும் தெரிவிக்கவில்லை.

அதைவிட வடக்கு மாகாணத்தில் உள்ள தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்களையும் கடந்த வாரம் இந்திய தூதுவர் சந்தித்திருந்தார். அங்கு கூட நமது கடற்தொழில் மக்களின் பிரச்னைகள் குறித்து பிரதிநிதிகள் எவற்றையும் கலந்துரையாடவில்லை.

ஆனால் என்னுடைய பேச்சுவார்த்தையில் கூடியளவு நேரம் இலங்கை இந்திய கடற்தொழிலாளர்கள் குறித்த பேச்சும், இந்திய கடற்தொழிலாளர்களின் அத்துமீறல்கள் குறித்துமே பேசப்பட்டது.

ஆனால் இந்திய தரப்பிலிருந்து இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தங்கள் ஏற்படுத்தப்படுமாக இருந்தால் நான் அமைச்சரவையில் இருந்து இராஜினாமா செய்துவிட்டு, எமது கடற்தொழிலாளர்களுடன் இணைந்து கடலில் எதிர்ப்புப் போராட்டம் நடத்துவதற்கு தயாராக உள்ளேன் என்பதை திட்டவட்டமாக தெரிவித்துக் கொள்கின்றேன்-என்றார். (அ)

## செப்.18...

கூறினார்.

இதேவேளை, தேர்தல் செலவுகளை ஒழுங்குபடுத்தும் சட்டம் குறித்து தெளிவுபடுத்துவதற்காக 40 அரசியல் கட்சிகள் பங்குபற்றியிருந்தன என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## உட்கட்சி...

கைவிடுவதாகத் தெரிய வில்லை. நாம் எமது எதிர்ப்பை பல்வேறு வழிகளில் வெளிப்படுத்துவோம் என்றும் அவர் கூறியுள்ளார்.

கிறிஸ்தவ மக்கள் தவக்காலத்தை கடைப்பிடித்து வருகின்றனர். இதையொட்டி மன்னார் ஆயர் விடுத்த தவக்கால செய்தியிலேயே மேற்படி விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அதில், மேலும் தெரிவிக்கப்பட்ட முக்கிய அம்சங்கள் வருமாறு,

தமிழர் தாயகத்தில் இன்று ஏற்பட்டுள்ள பெரும் உட்கட்சி முரண்பாடுகள் தமிழ் மக்களை ஏமாற்றமடையச் செய்துள்ளன. தேசிய அரசியல் கட்சிகளுக்கிடையே தொடர்ந்தும் இழுபறி நிலையே தொடர்கின்றது. எதிர்பார்க்கப்பட்ட பல்வேறு தேர்தல்கள் பின்தள்ளப்பட்டு வருகின்றது.

இது மக்களுக்கு ஏமாற்றத்தையும் கோபத்தையும் ஏற்படுத்தியுள்ளது. ஆட்சியில் உள்ளவர்கள் தமது ஆட்சி அதிகாரத்தை தக்கவைப்பதற்கு பல்வேறு காய்நகர்த்தல்களை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றனர். ஆகவே, இந்நிலையில் ஜனநாயக விழுமியங்கள் மதிக்கப்படவும் மக்களின் உரிமைகள் நிலைநாட்டப்படவும் தொடர்ந்து நாம் செபிப்போம்.

மன்னார் மாவட்ட மக்களின் வாழ்வாதாரப் பிரச்னைகள் தொடர்ந்து கொண்டுதான் இருக்கின்றன. பெரும்போக நெல் அறுவடை நடைபெறும் இக்காலத்தில் எதிர்பார்த்த விளைச்சல் இல்லாத சூழ்நிலையில் விவசாயிகள் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர்.

வறுமைக் கோட்டுக்குக்கீழ் வாழும் குடும்பங்கள் நுண்நிதிக் கடன்களால் பாதிக்கப்பட்டுள்ளனர். போதைப் பொருள் பாவனையின் தாக்கத்தால் குழந்தைகளின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி விட்டது.

மன்னார் தீவில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ள 250 மெகாவாட் காற்றாலை சக்தி திட்டத்தின் இரண்டாம் கட்ட வேலைகள் ஆரம்பிப்பதற்கு அரசாங்கம் முனைப்போடு செயல்படுகின்றது. இத்திட்டத்தால் மக்கள் எதிர்நோக்கும் பாதிப்புகள் குறித்து எம்மாலும் பொது அமைப்புகளாலும் பல சந்தர்ப்பங்களில் விரிவாக எடுத்துச் சொல்லப்பட்டுள்ளது.

ஆயினும் அரசாங்கம் இத்திட்டத்தை கைவிடுவதாகத் தெரியவில்லை. இந் நிலையில் தொடர்ந்தும் நாம் எமது எதிர்ப்பை பல்வேறு வழிகளில் வெளிப்படுத்துவோம் - என்றுள்ளது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# மாதகல் விகாரைக்கு அருகில் மீன்பிடிக்க கடற்படை தடை!

## நூற்றுக்கணக்கான தொழிலாளர்கள் பாதிப்பு

**யாழ்ப்பாணம், பெப். 28**

**மாதகல் சம்பில்துறை (ஜம்புகோள பட்டினம்) விகாரைக்கு அருகில் உள்ள கடற்பரப்பில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம் என கடற்படையினர் தடை விதித்துள்ளதாக அப்பகுதி கடற்தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.**

சம்பில்துறை பகுதியில் அமைந்துள்ள சங்கமித்த விகாரையின் பின்புறமாக உள்ள கடற்பகுதிகளில் மீன்பிடியில் ஈடுபடவேண்டாம் என கடந்த 2013ஆம் ஆண்டு கடற்தொழிலாளர்களுக்கு கடற்படையினர் தடை விதித்த நிலையில் , அப்போதைய ஜனாதிபதி மகிந்தவின் கவனத்திற்கு இவ்விடயம் கொண்டு செல்லப்பட்டதை அடுத்து , அப்பகுதிகளில் மீன் பிடியில் ஈடுபடக் கடற்படையினர் அனுமதித்தனர்.

இந்நிலையில் தற்போது அப்பகுதிக்கு பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள கடற்படை அதிகாரி , விகாரையின் பின் பகுதிகளில் மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட வேண்டாம் என அறிவித்துள்ளார்.அத்துடன் அப்பகுதிக்கு அருகில் கடற்தொழிலாளர்கள் மீன் பிடி நடவடிக்கையில் ஈடுபட்டால் கடற்படையினர் அவர்களை அவ்விடத்தில் இருந்து துரத்தி வருகின்றனர் என அப்பகுதி கடற்தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர். (அ)

# லேடி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சிறுமியை திருட்டுக்கு பயன்படுத்திய தாய்!

கொழும்பு, பெப். 28

கொழும்பு லேடி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் சிறுவர்களது பெற்றோரின் கையடக்கத் தொலைபேசிகளை 7 வயது சிறுமியை வைத்து திருடிய தாய் கைது செய்யப்பட்டுள்ளார்.

விசாரணையில் கையடக்கத் தொலைபேசிகளை திருடி தாயிடம் கொடுக்காவிட்டால் தனது தாய் தன்னை தாக்குவதாகவும் திருடிய கையடக்கத் தொலைபேசிகளை தனது தாய், தந்தையிடம் கொடுப்பதாகவும் சிறுமி பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இந்த வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் குழந்தை ஒன்றின் தாயின் 40 ஆயிரம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசி ஒன்றும் திருடப்பட்டுள்ளதாக பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது.

இதனையடுத்து கைது செய்யப்பட்ட சந்தேக நபரான தாய் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்ட பின்னர் எதிர்வரும் மார்ச் மாதம் 5 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. (அ)

# அதிக வெப்பத்தால் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்படும் பாடசாலை மாணவர்கள்

## பெற்றோர்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, பெப். 28

கடந்த சில வாரங்களாக அதிக வெப்பநிலை காரணமாக, நாடு முழுவதிலும் உள்ள பல பாடசாலை மாணவர்கள் வெப்பம் தொடர்பான நோய்களால் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக லேடி ரிட்ஜ்வே வைத்தியசாலையின் குழந்தை நல மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

எனவே, தற்போதைய வெப்பமான காலநிலையில் குழந்தைகள் நீரிழப்பு மற்றும் வெப்ப அதிர்ச்சியால் பாதிக்கப்படுவதைத் தடுக்க போதுமான கனிமங்களுடன் கூடிய திரவங்களை அதிக அளவில் வழங்குமாறு பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களிடம் மருத்துவர் கேட்டுக்கொண்டார்.

“போதுமான திரவங்கள் மற்றும் தாதுக்களை எடுத்துக் கொள்ளத் தவறினால் சோர்வு, தலைவலி, தூக்கம், வாந்தி, உடல் வலி, தூக்கமின்மை, அதிகரித்த தூக்கம் மற்றும் பசியின்மை போன்ற முக்கியமான உடல்நலச் சிக்கல்கள் ஏற்படலாம்” என்று மருத்துவர் கூறினார்.

குழந்தைகள் தண்ணீர் இல்லாமல் திறந்தவெளியில் விளையாடினால், அவர்கள் நீரிழப்பு மற்றும் வெப்ப அதிர்ச்சி நிலைகளால் பாதிக்கப்படுவார்கள்.

பெற்றோர்கள் தமது பிள்ளைகள் பாடசாலைக்குச் செல்லும்போது இரண்டு போத்தல்கள் தண்ணீர் கொடுக்குமாறு தீபால் பெரேரா கேட்டுக் கொண்டார்.

“இந்த நாட்களில் குழந்தைகளுக்கு இயற்கையான திரவங்களான இளநீர், தேசிக்காய், ஒரேஞ்ச் பானம் மற்றும் கஞ்சி வகைகளை பரிந்துரைக்கிறோம்,” என்று அவர் மேலும் கூறினார்.

இந்த வெப்பமான காலநிலையில், அதிக நேரம் தண்ணீரில் தொடர்புபடாமல் இருந்தால், குழந்தைகளுக்கு வியர்வை கொப்புளங்கள் மற்றும் எக்ஸிமா போன்ற தோல் நோய்கள் அதிகரிக்கும்.

எனவே, குழந்தைகளை ஒரு நாளைக்கு இரண்டு முறையாவது குளிப்பாட்டவும், குறைந்தது 20 நிமிடங்களுக்கு தண்ணீரில் குளிப்பதால் சருமத்தின் உபாதைகளை குறைக்கலாம்-என்றார். (அ)

# தரம் -6 மாணவன் மீது தாக்குதல் ஆளுநர் விசாரணைக்கு பணிப்பு

யாழ்ப்பாணம், பெப். 28

வடமராட்சி - நெல்லியடியில் தரம் 6 இல் இணைந்த புதுமுக மாணவன்மீது தரம் பத்து மாணவ்கள் தாக்குதல் நடத்தியமை தொடர்பில் உடனடியாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்பிக்குமாறு வடக்கு மாகாண ஆளுநர் உத்தரவிட்டுள்ளார்.

இதையடுத்து, பி. எஸ். எம். சார்ள்ஸின் பணிப்புரைக்கு அமைய இந்த விடயம் தொடர்பில் உடனடியாக விசாரணை நடத்தி அறிக்கை சமர்பிக்குமாறு பாடசாலை அதிபர், வலயக்கல்வி பணிமனைக்கு ஆளுநரின் நேரடி கண்காணிப்பின் கீழ் செயல்படும் அபயம் பிரிவினால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட மாணவன், தாக்குதலை நடத்திய மாணவர்களிடம் விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுப்பதாக பாடசாலையின் அதிபர் தெரிவித்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு பாதிக்கப்பட்ட மாணவனுக்கு உரிய தீர்வு பெற்றுக்கொடுக்கும் வரை ஆளுநரின் நேரடி கண்காணிப்பின் கீழ் செயல்படும் அபயம் பிரிவினால் தொடர் கண்காணிப்பு மேற்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

நெல்லியடியில் பிரபல பாடசாலை ஒன்றில் கடந்த 22ஆம் திகதி தரம் 6 மாணவனை தரம் 10ஐ சேர்ந்த மாணவர்கள் சிலர் தாக்கினர். இதில், பாதிக்கப்பட்ட தரம் 6 மாணவன் யாழ். போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஜனாதிபதி வேட்பாளராக நாமலை நியமிக்க திட்டமா?

கொழும்பு, பெப். 28

பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக அம்பாந்தோட்டை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவை நியமிக்க வேண்டும் என கட்சியின் மாத்தளை மாவட்ட பிரதிநிதிகள் கூட்டத்தில் யோசனை முன்வைக்கப்பட்டது.

மாத்தளையில் உள்ள ஹோட்டல் ஒன்றில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

எவ்வாறாயினும், பொதுஜன பெரமுனவின் மாத்தளை மாவட்டத் தலைவர் ஜனக பண்டார தென்னக்கோன் மற்றும் அவரது மகனும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித பண்டார தென்னக்கோனும் இந்தக் கூட்டத்துக்கு அழைக்கப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

கட்சியின் செயலாளர் சாகர காரியவசம் உட்பட பல பாராளுமன்ற உறுப்பினர்களும் மாத்தளை மாவட்ட பொதுஜன பெரமுன உறுப்பினர்களும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர். (அ)

# அரசமைப்பை மீறவில்லை!

## சபாநாயகர் திட்டவட்டம்



கொழும்பு, பெப். 28

“நான் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உயர் நீதிமன்றத்தின் கட்டளையைப் புறக்கணிக்கவில்லை, அரசமைப்பை மீறவில்லை, பாராளுமன்றச் சிறப்புரிமைகளை மீறவில்லை.”

- இவ்வாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

சபாநாயகருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவர எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது.

அந்தப் பிரேரணையில் கையொப்பம் திரட்டும் நடவடிக்கை திங்கட்கிழமை முதல் ஆரம்பமாகியுள்ளது.

இது குறித்து சபாநாயகர் தெரிவிக்கையில்-

பாராளுமன்றத்தில் எனக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்பட்டால் அது நீதியின் பக்கம் நிற்கும் உறுப்பினர்களால் தோற்கடிக்கப்பட்டே தீரும்.

நான் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் உயர் நீதிமன்றத்தின் கட்டளையைப் புறக்கணிக்கவில்லை, அரசமைப்பை மீறவில்லை, நாடாளுமன்றச் சிறப்புரிமைகளை மீறவில்லை.

அதனால் பொய்க் குற்றச்சாட்டுக்களுக்கு அஞ்சி என் பதவியை இராஜிநாமா செய்யமாட்டேன். எவருக்கும் பயந்து ஓடவும் மாட்டேன்-என்றார். (அ)

# சாவகச்சேரி வர்த்தகருக்கு 62 ஆயிரம் ரூபாய் தண்டம்!

தென்மராட்சி, பெப். 28

சாவகச்சேரியில் காலாவதியான மற்றும் மனித பாவனைக்கு உதவாத உணவுப் பொருட்களை விற்பனைக்கு வைத்திருந்த கடை உரிமையாளருக்கு 62 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி நகரப் பகுதியில் அந்தப் பகுதிக்கு பொறுப்பான பொது சுகாதார பரிசோதகர் சூ.

குணசாந்தன் தலைமையில் பொது சுகாதார பயிலுநர்கள் குழு இந்த சோதனை நடவடிக்கையை முன்னெடுத்தது.

இதன்போது, காலாவதியான பிஸ்கெற், சோடா மற்றும் மனித பாவனைக்கு உதவாத உணவுப் பைக்கெற்றுகளையும் தனது கடையில் காட்சிப்படுத்தியவர் பிடிபட்டார்.

கடை உரிமையாளருக்கு எதிராக நேற்று சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் வழக்கு விசாரணை நடந்தது. இதில், கடை உரிமையாளர் குற்றங்களை ஏற்றுக்கொண்டார். இதையடுத்து, அவருக்கு கடும் எச்சரிக்கை விடுத்த நீதிவான் 62 ஆயிரம் ரூபாய் அபராதமும் விதித்தார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.02.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



# வோக்னர் ஓய்வு!

வெலிங்டன், பெப். 28

சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் இருந்து நியூசிலாந்தின் முன்னணி வீரர் நீல் வோக்னர் ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

நியூசிலாந்து அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளரான நீல் வோக்னர் (வயது 37) நியூசிலாந்து அணிக்காக 64 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 874 ஓட்டங்களை எடுத்ததுடன் 260 விக்கெட்களையும் வீழ்த்தியுள்ளார்.

வரும் 29ஆம் திகதி வெலிங்டனில் தொடங்கும் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் பதினொருவர் நீல் வோக்னர் இடம்பெறமாட்டார் என்று அறிவிக்கப்பட்டதையடுத்து இந்த முடிவை அவர் எடுத்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (ஐ)

# முஹமது ஷமிக்கு சத்திர சிகிச்சை!



மும்பை, பெப். 28

இந்திய கிரிக்கெட் அணி வீரர் முகமது ஷமிக்கு கணுக்கால் சத்திர சிகிச்சை வெற்றிகரமாக முடிந்தது. சத்திர சிகிச்சை முடிந்ததை தனது எக்ஸ் பக்கத்தில் பகிர்ந்துள்ள ஷமி, “வெற்றிகரமாக அறுவை சிகிச்சை முடிந்தது. குணமடைய சிறிது காலம் ஆகும். மீண்டு வருவதை எதிர்நோக்கியுள்ளேன்.” என்று தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் வீரர் முகமது ஷமி தற்போது நடைபெற்று வரும் இங்கிலாந்துக்கு எதிரான தொடரில் இடது கணுக்கால் காயம் காரணமாக விளையாடவில்லை. கடந்த ஆண்டு இந்தியாவில் நடைபெற்ற ஒருநாள் உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் அதிக விக்கெட் வீழ்த்திய பந்துவீச்சாளராக ஜொலித்தவர் ஷமி. 7 போட்டிகளில் விளையாடி 24 விக்கெட்களை அவர் கைப்பற்றி இருந்தார். இதில் 3 போட்டிகளில் 5இற்கு மேல் விக்கெட்களை கைப்பற்றியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

நியூசிலாந்து அணிக்கு எதிரான அரையிறுதி போட்டியில் 7 விக்கெட்களை கைப்பற்றி இந்திய அணி இறுதிப் போட்டிக்கு முன்னேற உதவினார். அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஒருநாள் உலகக் கிண்ணத்தை இறுதிப் போட்டியில் கடைசியாக இந்தியாவுக்காக விளையாடி இருந்தார் ஷமி. அதன்பின் இடது கணுக்கால் காயத்துக்கு சிகிச்சை பெற்றுவருகிறார். (ஐ)

# ஐ. பி. எல். சம்பியன் பட்டத்தை பெங்களூர் வெல்லவேண்டும்!

**சுரேஷ் ரெய்னா**




நொய்டா, பெப். 28

பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி இந்த முறை ஐ. பி. எல். கிண்ணத்தை கைப்பற்ற வேண்டும் என்று சென்னை சுப்பர் கிங்ஸ் அணியின் முன்னாள் வீரர் சுரேஷ் ரெய்னா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ராஞ்சி டெஸ்டில் துருவ் ஜூரலின் விக்கெட் காப்பாளர் என்னை கவர்ந்தது. இந்த நிலையை எட்ட அவர் கடுமையாக உழைத்து இருக்கிறார். அவர் இராணுவ குடும்பத்தில் இருந்து வந்தவர். எனவே எங்கும், எப்போதும் எதையும் இழக்க விரும்பாத அச்சமற்ற மனப்பான்மை அவரிடம் உண்டு. ஜூரல் அற்புதமான வீரர். நான் அவருடன் இணைந்து உத்தரப்பிரதேச அணிக்காக ஓரிரு போட்டிகளில் விளையாடி இருக்கிறேன்.

ஐ. பி. எல். கிரிக்கெட்டில் இந்த முறை விராட் கோலியும், பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸூம் கிண்ணத்தைக் கையில் ஏந்த வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அவர்கள் நீண்டகாலமாக கிண்ணத்தை வெல்லாமல் உள்ளனர். கடந்த தொடரிலும் சென்னை சுப்பர் கிங்ஸ் கிண்ணத்தை வென்றது. ஆனால், இந்த ஆண்டு கிண்ணத்தை வெல்லாத ஒரு முறையும் கைப்பற்றாத பெங்களூர் அணி மகுடம் சூடும் என்று நம்புகிறேன். விராட் கோலி உண்மையிலேயே கடுமையாக கிண்ணத்தை வெல்ல தகுதியானவர் என்று கருதுகிறேன் - என்றார். (ஐ)




பங்களாதேஷூடனான தொடர்:

# இலங்கை அணியின் தலைவராக அசலங்க

கொழும்பு, பெப். 28

பங்களாதேஷூக்கு எதிரான இருபது - 20, ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடருக்கு இலங்கை அணியின் தலைவராக சரித் அசலங்க நியமிக்கப்பட்டுள்ளார்.

ஐ. சி. சி. விதிகளை மீறியமைக்காக வனிந்து ஹசரங்கவுக்கு இரு இருபது - 20 போட்டிகளில் விளையாடத் தடை விதிக்கப்பட்டது. இதையடுத்தே உபதலைவரான சகலதுறை வீரர் சரித் அசலங்க இலங்கை அணியின் தலைவராக அறிவிக்கப்பட்டுள்ளார். (ஐ)

# அயர்லாந்துடனான டெஸ்ட்: ஆப்கான் டெஸ்ட் அறிவிப்பு

காபூல், பெப். 28

ஆப்கானிஸ்தான் மற்றும் அயர்லாந்து அணிகளுக்கு இடையிலான ஒரு டெஸ்ட், 3 ஒருநாள் மற்றும் 3 இருபது - 20 போட்டிகள் கொண்ட தொடர் ஐக்கிய அரபு அமீரகத்தில் உள்ள அபுதாபி மற்றும் சார்ஜா மைதானங்களில் நடைபெறுகிறது. இந்த தொடர் இன்று தொடங்குகிறது.

இதில் முதலாவதாக டெஸ்ட் தொடரும் அதைத் தொடர்ந்து ஒரு நாள் மற்றும் இருபது - 20 தொடரும் நடைபெறவுள்ளன. இந்நிலையில் இந்த டெஸ்ட் தொடருக்கான ஆப்கானிஸ்தான் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணிக்கு ஹஸ்மத்துல்லா ஷாகிடி அணித் தலைவராகவும் ரஹ்மத் ஷா உபதலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

டெஸ்ட் அணி - ஹஸ்மத்துல்லா ஷாகிடி (தலைவர்), ரஹ்மத் ஷா (உபதலைவர்), இக்ராம் அலிகில் (விக்கெட் காப்பாளர்), ரஹ்மனுல்லா குர்பாஸ் (விக்கெட் காப்பாளர்). இப்ராகிம் ஷட்ரான், நூர் அலி ஜட்ரான், அப்துல் மலிக், பாஹீர் ஷா, நசீர் ஜமால், கரீம் ஜனத், காலில் குர்பாஸ், ஜாகீர் கான், சியா உர் ரெஹ்மான் அக்பர், நிஜாத் மசூத், இப்ராஹிம் அப்துல் ரஹிம்சாய், நவீத் சத்ரான். (ஐ)



# மாலைதீவு விவகாரத்தில் இந்தியா மெத்தனமாக இருக்கமுடியாது!



**சஷி தரூர்**

உலக ஊடகங்களில் தலைப்புச் செய்திகளை ஆக்கிரமிக்கும் உக்ரெய்ன் மற்றும் காசா போர்களுக்கு வெகு தொலைவில் அராபியக் கடலின் ஒரு மூலையில் இந்தியாவுக்கும் மாலைதீவுக்கும் இடையில் விசித்திமான ஒரு இராஜதந்திர நெருக்கடி ஒன்று மூண்டிருக்கிறது. அது இந்தியாவின் கேந்திர முக்கியத்துவ நலன்களை அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது.

இந்தியாவும் மாலைதீவும் பகைமை நாடுகளாக இருப்பது சாத்தியமில்லை. 12 இலட்சம் சதுர மைல்களுக்கும் அதிகமான பரப்பளவைக் கொண்ட இந்தியா வெறுமனே 115 சதுர மைல்கள் பரப்பளவுடைய மாலைதீவை விடவும் 11 ஆயிரம் மடங்கு பெரிய நாடு. இந்தியாவின் சனத்தொகை 140 கோடிக்கும் அதிகமானதாக இருக்கின்ற அதேவேளை மாலைதீவின் சனத்தொக 5 இலட்சமேயாகும்.

அது மட்டுமன்றி, சகல வகையான நெருக்கடிகளின்போதும் ஆதரவுக்கு மாலைதீவு அதன் மிகப்பெரிய அயல் நாடான இந்தியா மீதே தங்கியிருந்திருக்கிறது.

இலங்கைக் கூலிப்படைகள் 1988 ஆம் ஆண்டில் மாலைதீவில் ஆட்சிக்கவிழ்ப்பு சதி முயற்சியொன்றில் ஈடுபட்டபோது இந்திய பரா துருப்புக்களே அதை முறியடித்தன.

2004 டிசம்பரில் மாலைதீவை சுனாமி தாக்கியபோது மீட்புப் பணிகளுக்கு இந்திய கப்பல்களும் உதவிப்பணியாளர் குழுக்களுமே விரைந்தன.

2014 ஆம் ஆண்டு மாலைதீவின் ஒரேயொரு கடல்நீர் சுத்திகரிப்பு ஆலை செயலிழந்தபோது இந்தியாவே நீர்க் கொள்கலன்களுடன் விமானங்களையும் கடற்படைக் கப்பல்களையும் அனுப்பி உதவியது.

இந்த வகையான இடையறாத உதவிகள் இரு நாடுகளுக்கும் இடையிலான ஆழமான இருதரப்பு உறவுகளைப் பிரதிபலிக்கிறது. 1965 ஆண்டில் மாலைதீவு பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்து சுதந்திரம் பெற்றபோது அதன் சுயாதிபத்தியத்தை அங்கீகரித்த முதல் நாடுகளில் இந்தியாவும் ஒன்று. அதற்கு பிறகு இரு நாடுகளும் கேந்திர முக்கியத்துவ, பொருளாதார மற்றும் கலாசார களங்களில் பரந்து விரிந்த பன்முக உறவுமுறையொன்றை வளர்த்துக்கொண்டன.

இரு நாடுகளுக்கும் இருக்கும் பொதுவான கடல்எல்லையை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் பாதுகாப்பைப் பேணுவதில் இந்தியாவின் பாத்திரம் மாலைதீவுக்கு முக்கியமானது. இந்தியாவும் மாலைதீவும் பிராந்திய ஒத்துழைப்புக்கான தெற்காசிய சங்கத்தின் ( சார்க்) தாபக உறுப்பு நாடுகள் என்பதுடன் தெற்காசிய சுதந்தி வர்த்தக உடன்படிக்கையில் கைச்சாத்திட்டன.

மாலைதீவின் முக்கியமான ஒரு பொருளாதாரப் பங்காளி நாடான இந்தியா பரந்தளவு உதவிகளை வழங்குகிறது, பொருளாதார செயற்திட்டங்களையும் வர்த்தக உடன்படிக்கைகளையும் முன்னெடுப்பதில் உதவுகின்றது.

இவற்றுக்கு மேலதிகமாக, இரு நாடுகளுக்கும் இடையில் பல நூற்றாண்டு காலப் பழமைவாய்ந்த இன, மொழி, கலாசார மற்றும் மத ரீதியான தொடர்புகளும் இருந்துவருகின்றன. இந்தியாவுக்கு மாலைதீவுக்கும் இடையில் மிகவும் ஆழமான நல்லெண்ணமும் புரிந்துணர்வும் இருக்கும் என்றே எவரும் எதிர்பார்ப்பர். ஆனால், புவிசார் அரசியல் என்று வரும்போது நன்றியுணர்ச்சி வெறுப்புணர்ச்சியை விடவும் குறைந்தளவு வலிமை கொண்டதாகவே இருக்கிறது.

மாலைதீவு சிறிய அயல்நாடு என்ற உணர்வுப் பிரச்சினையினால் பாதிக்கப்பட்டிருக்கிறது போன்று தெரிகிறது. பத்தொன்பதாம் நூற்றாண்டில் மெக்சிக்கோ தலைவர் போஃபிரியோ டயஸ் அந்த உணர்வை "மெக்சிக்கோ கடவுளுக்கு



எவ்வளவு தொலைவில் இருக்கிறதோ அந்தளவுக்கு அமெரிக்காவுக்கு நெருக்கமாக இருக்கிறது" என்ற கூற்றின் மூலம் கச்சிதமாக வெளிப்படுத்தினார்.

மாலைதீவு ஜனாதிபதி முஹமட் முய்சு கடந்த செப்டெம்பரில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் கடுமையான இந்திய விரோதப் பிரசாரத்தைச் செய்து வெற்றிபெற்றார். பதவியேற்ற பிறகு அவர் 'இந்தியாவே வெளியேறு" என்பது வெறுமனே ஒரு பிரசாரச் சுலோகம் அல்ல என்பதை தெளிவாக வெளிக்காட்டினார். முதலாவது உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயமாக இந்தியாவுக்குப் போகாத முதல் மாலைதீவு ஜனாதிபதி முய்சுவே.

ஜனாதிபதி றிசெப் தயிப் எரடோகனின் தலைமைத்துவத்தின் கீழ் பெருமளவுக்கு இஸ்லாமியத் தன்மை கொண்டதாகவும் இந்தியாவுடன் குறைந்தளவு நட்புறவைக் கொண்டதாகவும் மாறிவருகின்ற துருக்கி நாட்டுக்கே முய்சு தனது முதலாவது வெளிநாட்டு பயணத்தை மேற்கொண்டார். அடுத்து அவர் இந்தியாவின் கடும் போட்டி நாடான சீனாவுக்குச் சென்றார்.

சமூக ஊடகங்கள் இராஜதந்திர பதற்றத்தை தூண்டிவிடுகின்றன. இந்தியாவின் லக்சதீவில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் பணி ஒப்படைக்கப்பட்டவர்களில் பலர் மாலைதீவை இந்தியர்கள் பகிஷ்கரிக்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கிறார்கள். இதற்கு பதிலடியாக ஜனாதிபதி முய்சுவின் மூன்று பிரதி அமைச்சர்களான மஹ்சூம் மஜீத், மால்ஷா ஷரீவ் மற்றும் மரியம் ய்னா ஆகியோர் இந்திய பிரதமர் நரேந்திர மோடியை அவமதிக்கும் வகையில் "கோமாளி" என்றும் "பயங்கரவாதி" என்றும் பதிவுகளைச் செய்தார்கள்.

இதனால் கடுமையாக ஆத்திரமடைந்த இந்தியர்கள் வெளியிட்ட கருத்துக்களை அடுத்து இரு தரப்புகளுக்கும் இடையில் மூண்ட சொற்போர் கட்டுப்பாட்டை மீறியது.

பிறகு மாலைதீவின் பிரதியமைச்சர்கள் மூவரும் பதவிகளில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டபோதிலும், அவர்கள் மோடிக்கு எதிரான கருத்துக்களை முய்சு சீனாவுக்கு மேற்கொள்ளவிருந்த விஜயத்துக்கு முன்னதாக தெரிவித்ததை தற்செயலான சம்பவம் என்று கூறமுடியாது. உண்மையில் இந்து சமுத்திரத்தில் அதிகரிக்கும் சீனாவின் செல்வாக்கு புதிய ஒரு போசகர் நாட்டை வளர்க்கும் சாத்தியத்தை கண்டறிய மாலைதீவை தூண்டியிருக்கிறது.

சீனாவில் இருந்த வேளையில் முய்சு அந்த நாட்டை மாலைதீவின் மிகவும் நெருக்கமான அபிவிருத்திப் பங்காளி என்று வர்ணித்தார். தற்போது இந்தியாவுக்கு அனுகூலமாக பெருமளவுக்கு அமைந்திருப்பதாக அவர் நம்பும் வர்த்தக உறவுகளை சமநிலைப்படுத்துவதற்கான தனது நோக்கத்தை தெளிவாக வெளிப்படுத்தினார்.



கொவிட் 19 பெருந்தொற்றுக்கு முன்னர் மாலைதீவின் முதல்தரமான சந்தையாக சீனா விளங்கியதாகக் கூறிய முய்சு மீண்டும் அந்த நிலையை எட்டுவதற்கு சீனக் கொள்கை வகுப்பாளர்கள் தங்களது முயற்சிகளைத் தீவிரப்படுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார். சீனாவுக்கும் மாலைதீவுக்கும் இடையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ஒன்றைச் செய்வதற்கான பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

இரு நாடுகளும் அவற்றுக்கு இடையிலான இரு தரப்பு உறவுகளை அகல்விரிவான மூலோபாய ஒத்துழைப்பு கூட்டுப் பங்காண்மையாகவும் உயர்த்தியிருக்கின்றன. சீனாவின் உலகளாவிய பாதுகாப்பு செயற்திட்டத்தில் முய்சு இணைந்து கொண்டுள்ளார். இது சீனா மாலைதீவில் அதன் பிரசன்னத்தை அதிகரிப்பதற்கும் சூழவுள்ள பகுதிகளில் டிஜிட்டல் மற்றும் கண்காணிப்பு ஆற்றல்களை விரிவுபடுத்துவதற்கும் வசதியாக அமையும்.ஏற்கெனவே சீனாவின் ஆய்வுக் கப்பலான சியாங் யாங் ஹொங் 03 மாலைதீவு கடற்பரப்புக்கு வந்திருக்கிறது.

மாலைதீவு அதன் மூலோபாயத் தெரிவுகளைச் செய்வதில் - குறிப்பாக, சீனாவுக்கு நெருக்கமாகச் சென்ற பல நாடுகள் கடன்பொறியில் அகப்பட்டிருப்பதை கவனத்திற்கொண்டு - மிகவும் கவனமாக நடந்து கொள்ளவேண்டும் என்று இந்தியா அறிவுறுத்தியிருக்கிறது. ஆனால் இந்தியாவின் இந்த எச்சரிக்கை சுதந்திரமாகச் செயற்படுவதில் முய்சுவுக்கு இருக்கும் உறுதிப்பாட்டை மேலும் அதிகரிக்கவே செய்திருக்கிறது போன்றே தெரிகிறது.

இந்தியாவுடன் சேர்ந்து செய்த நீர்ப்பரப்பு ஆய்வை இப்போது இடைநிறுத்தியிருக்கும் மாலைதீவு கொழும்பு பாதுகாப்பு மகாநாட்டையும் **(Colombo Security Conclave)** பகிஷ்கரித்தது. இந்த மகாநாடு இந்தியாவையும் மாலைதீவு,மொரீஷியஸ் மற்றும் இலங்கையையும் நெருக்கமாகக் கொண்டுவரும் நோக்கத்தைக் கொண்டதாகும்.

மேலும், தேர்தலின்போது மாலைதீவு மக்களுக்கு வாக்குறுயளித்ததன் பிரகாரம் இந்தியத் துருப்புக்களை தனது மண்ணில் இருந்து வெளியேற்றும் நடவடிக்கைகளிலும் ஜனாதிபதி முய்சு இறங்கியிருக்கிறார். மாலைதீவு தேசிய பாதுகாப்பு படைகளுக்கு பயிற்சியளிப்பதற்கு மேலதிகமாக அந்த படைகளுக்கு இந்தியாவினால் வழங்கப்பட்ட இரு ஹெலிகொப்டர்களையும் ஒரு ட்ரோனியர் விமானத்தையும் பராமரிக்க 77 இந்தியப் படைகள் அங்கு நிலைகொண்டுள்ளன. அந்த படைகளை மாரச் 15 ஆம் திகதிக்கு முன்னதாக வாபஸ்பெற்றுவிடவேண்டுமென்று முய்சு காலக்கெடு விதித்திருக்கிறார்.

மாலைதீவின் பல்வேறு சிறிய தீவுகளில் இருந்து தலைநகர் மாலேக்கு நோயாளர்களை ஏற்றிவருவதற்கு பயன்படுத்தப்படும் ஹெலிகொப்டர்களும் 500 க்கும் அதிகமான நோயாளர்களின் உயிரைக் காப்பாற்றியிருக்கிறது. ஆயுதங்கள் மற்றும் போதைப்பொருள் கடத்தல்காரர்கள் உட்பட சந்தேகத்துக்கிடமான கப்பல்களைக் கண்காணிக்க மாலைதீவு இராணுவம் இந்தியா வழங்கிய ட்ரோனியர் விமானத்தை பயன்படுத்தியது. மாலைதீவில் உள்ள தனது இராணுவத்தினருக்கு பதிலாக சிவிலியன் தொழில்நுட்ப உதவியாளர்களை இந்தியா இப்போது அனுப்பவேண்டியிருக்கிறது.

மாலைதீவைச் சுற்றியுள்ள கடல் பிராந்தியத்தில் ரோந்துசெய்யும் பணிகளை மாலைதீவு தேசிய பாதுகாப்பு படையின் உதவியுடன் இந்தியாவே கையாண்டுவந்தது. விரைவில் அந்தப் பணிகளை துருக்கி இராணுவ ட்ரோன்களே செய்யவிருக்கின்றன. துருக்கிக்கு மேற்கொண்ட விஜயத்தின்போது முய்சு அத்தகைய ட்ரோன்களை வாங்குவதற்கு 37 மில்லியன் அமெரிக்க டொலர்கள் உடன்பாடொன்றைச் செய்தார்.

துருக்கி ஜனாதிபதி எர்டோகனைப் போன்று முய்சுவும் தனது நாட்டை பெருமளவுக்கு இஸ்லாமியப் பாதையிலேயே கொண்டுசெல்ல விரும்புகிறார். மாலைதீவு ஜிகாதிகள் இஸ்லாமிய அரசு இயக்கத்தில் இணைந்து ஈராக்கிலும் சிரியாவிலும் போராடுகிறார்கள். முஸ்சுவின் ஆட்சியில் மாலைதீவு சுற்றுலா விடுமுறைப் போக்கிடங்களுக்கு வெளியே கிறிஸ்தவக் கொண்டாட்டங்களுக்கு தடைவிதித்திருக்கிறது.

மாலைதீவு அதன் தற்போதைய பாதையிலேயே தொடர்ந்து செல்லுமாக இருந்தால் சீனாவுக்கு நெருக்கமானதும் இஸ்லாமிய தீவிரவாதத்தை வளர்க்கின்றதும் இந்திய மூலோபாய நலன்களை அவமதிக்கின்றதுமான நாடொன்றுக்கு பக்கத்தில் இந்தியா வாழவேண்டியிருக்கும். இது விடயத்தில் இந்தியா மெத்தனமாக இருக்கமுடியாது.

# அடையக்கூடிய எல்லைக்கு நல்லிணக்கத்தைக் கொண்டுவருதல்!

ஆதரவான சர்வதேச சூழ்நிலை இருக்கின்ற போதிலும், இலங்கை இனநெருக்கடியில் ஒரு தேக்க நிலை இருக்கிறது போன்று தெரிகிறது. அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியா தலைமையில் சர்வதேச சமூகம் இலங்கைக்கு பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் குறிப்பாக நீண்டகால இனநெருக்கடிக்கு நீதியானதும் பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளக்கூடியதுமான தீர்வொன்றைக் காண்பதற்கு ஆதரவு வழங்கி வருகிறது.

கையாள முடியாதவையாக காணப்பட எத்தனையோ பிரச்சினைகள் திடீரென்று காணாமல் போன பல உதாரணங்கள் இருக்கின்றன. ஆனால், அவை தாங்களாகவே காணாமல் போகவில்லை. பெருமளவு பணிகள் கடந்த காலத்தை மறந்து எதிர்கால நலன்களை மனதிற்கொண்ட தலைவர்களினால் திரைக்குப் பின்னால் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

இலங்கையும் அதன் சந்தர்ப்பத்தை தாமதிக்காமல் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். அரசியல் தலைவர்களும் சிந்தனாவாதிகளும் விவேகமாக நடந்துகொண்டால் அது சாத்தியமாகும். இது விடயத்தில் இரண்டாவது உலகப் போருக்கு பின்னரான மேற்கு ஐரோப்பா இலங்கை பின்பற்றக்கூடிய ஒரு உதாரணமாக விளங்குகிறது.

இரண்டாவது உலகப் போருக்கு முன்னதாக ஐரோப்பிய நாடுகள் நிரந்தர மாக மோதலில் இருந்தன. அவற்றின் கூட்டுக்கள் போட்டி முகாம்களில் ஒன்றில் இருந்து மற்றதுக்கு மாறிக்கொண்டிருந்தன. பிரான்ஸுக்கும் இங்கிலாந்துக்கும் இடையிலான ஒரு நூற்றாண்டு கால போரை ஐரோப்பா கண்டது.

ஆனால், இரண்டாவது உலகப் போரின் விளைவான பேரழிவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் உருவாக்கமும் உருக்குலைந்த ஐரோப்பிய பொருளாதாரங்களின் மீட்சிக்கு உதவியது. மேற்கு ஐரோப்பாவில் போர் என்பது நினைத்துப் பார்க்கமுடியாததாக மாறியது.

அண்மையில் காலமான ஜொஹான் கல்ருங் போன்ற உலகப்புகழ்பெற்ற சமாதானச் சிந்தனாவாதிகளை ஐரோப்பா தோற்றுவித்தது. நேர்மறையான சமாதானத்துக்கும் எதிர்மறையான சமாதானத்துக்கும் இடையிலான கோட்பாட்டு அடிப்படையிலான வேறுபாட்டை கல்ருங் விளக்கிக்கூறினார். அத்தகைய தோற்றப்பாடு இலங்கையிலும் கூட இருக்கமுடியும்.

மூன்று தசாப்தகால உள்நாட்டுப் போரும் அண்மைக்கால பொருளாதார வீழ்ச்சியும் போர்களங்களாக இருந்த வடக்கு , கிழக்கிற்கு வெளியே இனநெருக்கடியை பின்னரங்கத்துக்கு தள்ளிவிட்டன. ஆனால், அது எதிர்மறையான சமாதானமே. போர் இல்லையே தவிர, இந்த நாடு தங்களது தாயகம் என்று தாங்கள் அதன் பிள்ளைகள் என்றும் சகல சமூகத்தவர்களும் கொண்டாடக்கூடிய சமாதானம் அல்ல.

இளைஞர்களுக்காக "பன்முக சமூகம் ஒன்றில் வாழ்தல்" பற்றிய கருத்தரங்கு ஒன்று அண்மையில் நடத்தப்பட்டது. அதில் கலந்துகொண்டவர்களில் பெரும்பாலானவர்களுக்கு இலங்கையில் உள்நாட்டுப்போர் ஒன்று இடம்பெற்றதைப் பற்றியோ அல்லது அந்தப் போருக்கு வழிவகுத்த காரணங்கள் பற்றியோ எதுவும் தெரிந்திருக்கவில்லை. அது மாத்திரமல்ல, வடக்கு, கிழக்கில் இருந்து வந்த இளைஞர்களும் கூட அந்த விடயத்தைப் பற்றி பேசுவதில் பெரிய அக்கறையைக் காண்பிக்கவில்லை.

தேசியவாதிகளின் சீற்றம் எதுவுமின்றி இராணுவத்துக்கு ஆட்சேர்ப்பைக் குறைப்பதன் மூலம் அதன் அளவை குறைப்பதற்கு அரசாங்கம் எடுத்த தீர்மானம் இந்த புதிய தோற்றப்பாட்டின் மிகவும் புதிய தோற்றப்பாட்டின் நேர்மறையான அறிகுறியாகும். மக்களின் கவனம் பொருளாதாரம், ஊழல் மற்றும் அதிகாரத் துஷ்பிரயோகம் போன்ற விடயங்களில் குவிந்திருக்கிறது.

இனநெருக்கடிக்கு பரஸ்பரம் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்வொன்றைக் காண்பதற்கான சாத்தியத்தைக் கொண்டுவரும் முன்முயற்சிகள் ஆபத்தில்லாதவையாக நோக்கப்படும் சூழ்நிலை இருக்கிறது. அதை அவ்வாறே தொடர்ந்து வைத்திருக்கவேண்டும்.ஆனால், 13 வது அரசியலமைப்பு திருத்தத்தின் கீழ் மாகாணசபைகளுக்கு இருக்கும் பொலிஸ் அதிகாரங்களை நீக்குவதற்கு பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படும் தனிநபர் சட்டமூலம் இதற்கு மாறானதாக இருக்கிறது.

**நம்பிக்கையை வென்றெடுத்தல்**

தேசத்தைக் கட்டியெழுப்பும் பணிக்கு ஆதரவும் அங்கீகாரமும் வழங்க பெரும் முயற்சிகள் முன்னெடுக்கப்படவேண்டிய தேவை குறித்து சகல இன, மத சமூகங்களினதும் தலைவர்கள் மத்தியல் புரிந்துணர்வு அதிகரித்துவருகிறது. சிறப்பான எதிர்காலத்துக்காக சமூகங்களுக்கு வலுவூட்டுதல் என்ற தொனிப்பொருளில் சர்வதேச மனித உரிமைகள் உலகளாவிய அமைப்பினால் (**International Human Rights Global Mission**) நிகழ்வு ஒன்று அண்மையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்த அமைப்பின் பிரதம ஆலோசகர் எம்.வை.எம். நியாஸ் தலைமையில் ஏற்பாட்டுக் குழுவினர் பிரதம விருந்தினராக பாராளுமன்ற சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவை அழைத்திருந்தனர். ஆனால், அவரால் வந்து பங்கேற்கமுடியாமல் இருந்தபோது அவர்கள் நடுநிலை உணர்வின் ஒரு வெளிப்பாடாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்கவை அழைத்து பரிசளிப்பு வைபவத்துக்கு தலைமை தாங்க வைத்தனர்.

மாற்றுத்திறனாளிகளில் சாதனை புரிந்தவர்களுக்கும் கடந்த மூன்று தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக அகிம்சைவழி தொடர்பாடலில் மகத்தான சேவை செய்துவரும் கலாநிதி ஜோ வில்லியம் உட்பட பல்துறைச் சமூக சேவையாளர்களுக்கும் விருதுகள் வழங்கி கௌரவிப்பதில் சகலரையும் அரவணைக்கும் ஒரு அணுகுமுறை வெளிக்காட்டப்பட்டது.





கலாநிதி ஜெகான் பெரேரா

தேசிய நல்லிணக்கத்தை மேம்படுத்துவதற்கு முன்னெடுக்கப்பட்ட இரு அண்மைய முன்முயற்சிகளுக்கு எதிர்ப்பு கிளம்பியது. ஆனால், கலந்தாலோசனைகளை நடத்த மிகவும் உகந்த முறையில் கையாண்டால் அந்த முயற்சிகள் பிரச்னைத் தீர்வுக்கு ஆக்கபூர்வமாக பங்களிப்புச் செய்யக்கூடிய ஆற்றலைக் கொண்டிருக்கின்றன.

முதலாவது முன்முயற்சியாக உண்மை, ஐக்கியம் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஆணைக்குழு சட்டமுலம் வர்த்தமானியில் வெளியிடப்பட்டது.சிவில் சமூகச் செயற்பாட்டாளர்கள் குறிப்பாக வடக்கு, கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களைப் பிரதிநிதித்துவம் செய்பவர்கள் சட்டமூல வரைவு குறித்து கடுமையான விமர்சனங்களை முன்வைத்திருக்கிறார்கள். குறிப்பாக காணாமல் போனவர்களுக்கு நேர்ந்த கதி குறித்தும் அவர்களின் குடும்பங்கள் அனுபவிக்கும் துன்பங்கள் குறித்தும் அக்கறையற்ற ஒரு நச்சுத்தனமான சூழ்நிலை இருப்பது குறித்து அவர்கள் கவனம் செலுத்தியிருக்கிறார்கள்.

புதிய நல்லிணக்கப் பொறிமுறை குறித்து பொதுவான பிரதிபலிப்பு பெருமளவுக்கு அக்கறையில்லாத ஒன்றாக இருக்கிறது. கடந்த காலத்தில் நடந்தவற்றை விசாரணை செய்வதற்கு இன்னொரு பொறிமுறையை அமைப்பதாகவே சட்டமூல வரைவு நோக்கப்படுகிறது. புதிய பொறிமுறை தொடர்பில் பாதிக் கப்பட்டவர்களும் அவர்களுக்காகப் பேசுகின்ற சிவில் சமூகக் குழுக்களும் நம்பிக்கையில்லாதவர்களாகவே இருக்கிறார்கள்.

பாதாக்கப்பட்ட சமூகத்தின் பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதில் அரசாங்கம் அக்கறை காட்டாமல் இருப்பது முக்கியமான ஒரு குறைபாடு. சிவில் சமூக அமைப்புக்கள் மற்றும் பாதிக் கப் பட்டவர்களுக்காக குரல்கொடுக்கின்ற அரசியல் கட்சிகள் மத்தியிலும் அந்த பிரதிநிதிகளை அரசாங்கத்தினால் காண முடியும்.

காணாமல் போனவர்களின் குடும்பங்கள் மீண்டும் விண்ணப்பங்களைச் செய்யவேண்டும் என்று கோருவது மிகவும் கொடுமயானதாகும். ஏற்கெனவே அவர்கள் பல தடவைகள் சாட்சியம் அளித்துவிட்டார்கள். அவர்களின் விண்ணப்பங்களை அரசாங்கம் பரிசீலனை செய்யத் தவறிவிட்டது.

இரண்டாவது உலகப் போருக்கு பிறகு ஐரோப்பாவில் நல்லிணக்கம் பல்வேறு பல்வேறு துறைகளில் முனானெடுக்கப்பட்டது. ஆனால், நுரம்பேர்க் விசாரணைகளுக்கு பிறகே அது நடந்தது. அந்த போரில் தோற்கடிக்கப்பட்டவர்களை அவர்களது குற்றச்செயல்களுக்காக (யூதர்கள், ஸ்லேவ்ஸ் மற்றும் ஜிப்சிகளின் இனப்படுகொலை உட்பட) பொறுப்புக்கூற வைக்கக்கூடியதாக இருந்ததால் அந்த விசாரணைகள் சாத்தியமானது.

மறுபுறத்தில், இலங்கையில் பொறுப்புக்கூறவைக்கப்பட வேண்டியவர்கள் போரில் வெற்றிபெற்ற தரப்பைச் சேர்ந்தவர்களாக இருப்பதால் அத்தகைய விசாரணைகள் பெரும் கடினமானவையாக

(16ம் பக்கம் பார்க்க)

# மூதூர், சேனையூர் மத்திய கல்லூரியின் 67ஆவது ஆண்டு நிறைவு தின நிகழ்வுகள்

திருமலை, பெப். 28

பாடசாலையின் 67 ஆவது ஆண்டு நிறைவையொட்டி ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கலை கலாசார நிகழ்வுகள் பாடசாலை அதிபர் எஸ்.பாகியேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி எம்.ஐ.எம்.நளிம் பிரதம அதிதியாகவும், மூதூர் கோட்டக்கல்வி பணிப்பாளர் அம்பிகைபாகன் கௌரவ அதிதியாகவும், மூதூர் வலயக் கல்வி பிரதிப் பணிப்பாளர் தே. ஜெயந்தன், சம்பூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி திரு எஸ்.ஜே.. துசார, இக்கல்லூரியின் ஓய்வு நிலை அதிபர் இரா.இரத்தின சிங்கம், இக்கல்லூரியின்

பழைய மாணவியும், ஸ்ரீ சண்முகா இந்துமகளிர் கல்லூரியின் முன்னைநாள் அதிபருமான திருமதி சுலோசனா ஜெயபாலன், பழைய மாணவியும் திருகோணமலை உதவித் தொழில் ஆணையாளருமான திருமதி நவஜீவனா குபேந்திரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும், நிகழ்வில் பங்கேற்றனர். (அ)



# அடையக்கூடிய எல்லைக்கு...

(15ம் பக்கத் தொடர்ச்சி)

இருக்கும். இது ஒரு உள்நாட்டு மோதல் என்பதால் பாதிக்கப்பட்ட சமூகங்களின் பிரதிநிதிகள் பேச்சுவார்த்தை மேசைக்கு வரக்கூடியதாக அவர்களுக்கு வலுவூட்ட பேச்சுவார்த்தை மூலமான தீர்வைக் காண வேண்டிய ஒரு குழப்பகரமான நிலை காணப்படுகிறது.

**அரசியல் தீர்வு**

இரண்டாவது முன்முயற்சி "இமாலயப் பிரகடனத்துக்கான" அடிப்படையாக அமைந்த புலம்பெயர் சமூகத்துக்கும் பௌத்த மதகுருமாருக்கும் இடையிலான பேச்சுவார்த்தையின் வடிவில் நல்லிணக்கத்தை மேம்படுத்துவதாகும். இந்த உடன்படிக்கை புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தின் வேறு பிரிவினராலும் இலங்கையில் பாதிக்கப்பட்ட குடும்பங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் சில சிவில் சமூகக் குழுக்களினாலும் நிராகரிக்கப்பட்டது.

ஆனால், கடந்த காலத்தில் பல விவகாரங்களில் எதிரெதிரான தீவிர நிலைப்பாடுகளக் கொண்டவர்கள் என்று கருதப்பட்டவர்களுக்கு இடையில் பகிரங்கமாகக் காணப்பட்ட சொற்ப எண்ணிக்கையான உடன்படிக்கைகளில் இது ஒன்றாகும். பிரதமர்களினாலும் ஜனாதிபதிகளினாலும் கைச்சாத்திடப்பட்ட போதிலும் இந்த உடன்படிக்கைகள் நின்றுபிடிக்கவில்லை.

இமாலயப் பிரகடனத்தில் கூறப்பட்டிருப்பவை பொதுப்படையான விவகாரங்களே தவிர எந்த பிரச்சினையையும் விசேடப்படுத்திய விளக்கங்கள் இல்லை.

இமாலயப் பிரகடனத்தில் கைச்சாத்திட்ட பௌத்த பிக்குமார் தங்களது மத ஒழுங்கில் சிரேஷ்ட அந்தஸ்தைப் பெற்றவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அதனால் அவர்களினால் பிரகடனம் குறித்து பௌத்த குருமாருடனும் படிநிலையில் உயர்ந்த ஸ்தானத்தில் இருக்கும் மிகவும் சிரேஷ்ட பௌத்த மத தலைவர்களுடனும் பேசக்கூடியதாக இருந்தது. இந்த தலைவர்கள் நாட்டில் இன, மத நல்லிணக்க நிலையை ஏற்படுத்துவதற்கு கூடுதல் நேரத்தைச் செலவழிக்கத் தயாராயிருப்பதாக கூறியிருக்கிறார்கள்.

இமாலயப் பிரகடனத்தின் ஆறு அம்சங்களில் ஒன்று 'ஐக்கியப்பட்டதும் பிளவுபடாததுமான நாட்டுக்குள் அதிகாரப் பரவலாக்கலுக்கு" அழைப்பு விடுக்கிறது. இத்தகைய அதிகாரப் பரவலாக்கம் இந்தியாவிலும் பல இனங்களையும் பல மதங்களையும் கொண்ட மலேசியா, இந்தோனேசியா போன்ற எமது பிராந்திய நாடுகளிலும் நடைமுறையில் இருக்கிறது.

நாட்டின் எதிர்காலம் குறித்து தீர்மானிப்பதற்கான அதிகாரத்தை வேறுபட்ட இன,மத சமூகங்கள் பகிர்ந்துகொள்வதற்கு வழியொன்றைக் கண்டுபிடிப்பது போரும் மோதல்களும் மீண்டும் இடம்பெறாதிருப்பதை உறுதிசெய்வதற்கு அடிப்படையானதாகும்.

பாதிக்கப்பட்ட சமூகங்களைப் பொறுத்தவரை பொறுப்புக்கூறல் முன்னுரிமைக்குரிய விடயமாகும். ஆனால் முழுமையாக தமிழர்களைப் பொறுத்தவரை, தங்களது சொந்த உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் தங்களுக்காக தீர்மானங்களை எடுப்பதற்கும் தங்களைத் தாங்களே ஆள்வதற்கும் இன,மத சிறுபான்மைச் சமூகங்கள் அதிகாரமற்றவையாக இருப்பதே அவர்களின் அதிருப்திக்கான மூலவேர்க் காரணியாகும். இது தேர்தல்களுக்குப் பிறகு அரசியமைப்புச் சீர்திருத்தங்களை கொண்டுவரவேண்டிய தேவையை உணர்த்துகிறது.

இன, மத சிறுபானமைச் சமூகங்களின் பங்கேற்புடனும் அவர்களுடனான கலந்தாலோசனையுடனும் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களைக் கொண்டுவருவது நடைமுறை யதார்த்தமாக வருமானால் ஐரோப்பாவில் நடந்ததைப் போன்று இலங்கையினாலும் இனமோதலை கடந்த காலத்திற்குள் தள்ளிவிடக்கூடியதாக இருக்கும்.

அவ்வாறு இல்லையானால் (1980களில் தொடங்கி மூன்று தசாப்தங்கள் நீடித்த போருக்கு பொறுப்பான) அரசியல் தலைவர்கள் முன்வைத்த சர்ச்சைக்குரிய பிரச்சினைகளில் கருத்தொருமிப்பு ஏற்படமுடியாத காரணத்தால் நல்லிணக்கச் செயன்முறைக்கு மிக நீண்ட காலம் எடுக்கும். ●

